# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2022 டிசம்பர்**

**மலர்:43 இதழ்:12**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600002


**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...


1. **அரசியல்வாதம் எனும் நம்பிக்கைத் துரோகம்!**
   *தலைவர் மடல் ...............................4*
2. **இனி போராட்டம் ஒன்றே அரசுக்கு புரிய வைக்கின்ற மொழி!**
   பொதுச் செயலாளர் மேசையிலிருந்து.................................*7*
3. **டீ வித் காம்ரேட்!**.................................*9*
4. **கொத்தடிமை அத்தக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் அரசாணை எண் 115 ஐ ரத்து செய்திடுக!** .......................................*12*
5. **இலங்கையின் புதிய அத்தியாயம்!**.............*15*
6. **நிதியமைச்சரின் சமூகநீதி!**.......................*16*
7. **கேரள அமைச்சர்கள் என்றாலே ஆச்சர்யம்தான்!** ..................................*17*
8. **டிசம்பர் இருபத்தைந்து** ..........................*17*
9. **மனம் கவர்ந்த தி கிரேட் டிக்டேட்டர்**.........*18*
10. **ஊழியர் நடத்தை விதிகள், 2027**............*20*
11. **மீண்டும் முடியாட்சிக்கு செல்லப்போகிறோமா?**..........................*22*
12. **நம் பொறுமைக்கும் எல்லையுண்டு!**.........*28*
13. **ஒரு இயந்திரம் போல் மனிதன் இருக்க முடியுமா?**...............................*30*
14. **ஆளுநரின் அதிகாரம்**............................*32*



# அரசியல்வாதம் எனும் நம்பிக்கைத் துரோகம்!

பொய்கள் பேசி தங்கள் பகட்டையும், பதவிகளையும் அதிகாரத்தையும் நிறுத்திக் கொண்டவர்கள் மத்தியில் அவர்கள் பேசிய பொய்களை நம்பி நம்பியே வாழ்வாதாரங்களை வாழ்க்கையை தொலைத்து விட்ட, தொலைத்துக் கொண்டிருக்கும் மக்களின் துயரம்தான் இன்றைய இந்தியாவின் பெருமையாக வரலாறு எழுதிக்கொண்டிருக்கிறது.

பெண்களுக்கு எதிரான வழக்குகளில் சிக்கிய எம்எல்ஏக்கள், எம்பிக்களில் நாட்டிலேயே முதலிடத்தில் பாஜக இருப்பதாக தினசரிகளிலும் மீடியாக்களிலும் செய்திகள் வரக்கூடிய அதே வேளையில்தான் அந்தக் கட்சியின் தமிழகத் தலைவராக இருப்பவர் பாஜக ஆட்சிக்கு வந்தால் பெண்கள் பற்றி தவறாகப் பேசினால் நாக்கு இருக்காது, கை வைத்தால் கை இருக்காது என்று நா கூசாமல் கூறுகிறார்.

தன்னுடைய அரசு பதவி ஏற்றதும் 100 நாட்களுக்குள் ஸ்விஸ் வங்கியில் இந்திய அரசியல் வாதிகள் பெரும் பணமுதலைகள், தனி நபர்கள் போட்டு வைத்துள்ள கணக்கில் காட்டப்படாத பணத்தை எடுத்து இந்திய மக்கள் ஒவ்வொருவருக்கும் தலா 15 லட்ச ரூபாய் தருவதாக, ஓட்டு வேட்டையாடிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பிரதமராகி 3000 நாட்கள் நெருங்கும் நிலையிலும் இன்றுவரை குறைந்த பட்சம் அந்த வங்கியில் பணம்போட்டு வைத்துள்ள நபர்களின் பெயர்களைக்கூட வெளியிடவில்லை. வருடத்திற்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும் என்று திறம்பட உரைத்த அவர்தான் இன்று பலகோடி இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான கதவுகளை அடைத்து நாட்டையே தனியார்மயத்திடம் விற்றுவிடுவதில் முனைப்பாக இருக்கிறார்.

ஒரு கூட்டத்தில் நன்கு பக்குவப்பட்ட அரசியல்வாதியைப் போல் பாரதப் பிரதமர் மோடி அவர்கள் “மக்களே, ஒரு சிறிய போலிச்செய்தி கூட நாடு முழுவதும் புயலைக்கிளப்பி விடும் அதனால் சமூக வலைத்தளங்களில் எதையும் ஷேர் செய்வதற்கு முன்பு அதன் நம்பகத் தன்மையை உறுதி செய்ய வேண்டும்.’’ என்று உரையாற்றிட, அவருடைய அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக உள்ள அமித்ஷா அவர்களோ அதற்கு 360 பாகை விலகி “உண்மையோ... பொய்யோ... பாஜக நினைத்தால் அதை ஒரு மணி நேரத்தில் நாடு முழுவதும் பரப்பி நாட்டையே பாரபரபாக்குவோம்.’’ என்று வேறொரு பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு நடந்தது குறித்து தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொண்டதாக அன்றைய தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி கூறியிருந்த நிலையில் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக நிமிடத்திற்கு நிமிடம் எடப்பாடி பழனிச்சாமியிடம் தெரிவித்தாக சம்பந்தப்பட்ட சமயத்தில் தலைமை செயலாளராக இருந்த திருமதி கிரிஜா வைத்தியநாதனும், உளவுத்துறை ஐஜியும் விசாரணை ஆணையத்தில் சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் கூறியுள்ள அப்பட்டமான பொய் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

நம் நாட்டில் கஷ்டப்பட்டு படித்து, பல தேர்வுகள் எழுதி பாஸாகி அரசாங்க வேலைக்கு சேர்ந்து ஆயுள் முழுதும் உழைக்கக்கூடிய அரசு ஊழியர்கள், ஆசிரியர் போன்றோருக்கு வழங்கப்பட்டு வந்த பயனளிப்பு ஓய்வூதியும் பங்களிப்பு ஓய்வூதியமாக மாறி 19 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் அதற்காக அரசு உழியர்கள், ஆசிரியர்கள் இதர பிரிவினர் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கும் நிலையில் மக்களிடம் ஓட்டு வாங்கி எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. ஆகி ஐந்து வருடங்கள் அப்பதவியில் இருந்ததற்காக வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் பற்றி எந்த பொருளாதார வல்லுநர்களும் அறிஞர்களும் கேள்வி கேட்பதில்லை. பஞ்சாப் போன்ற மாநிலங்களில் ஒருவர் எத்தனை முறை எம்.எல்.ஏ. அல்லது எம்.பி.யாக இருக்கிறாரோ அத்தனை முறைக்கும்

ஓய்வூதியம் பெற்றுவருகிற ஏற்பாடு நடைமுறையில் இருந்ததன் மூலம் அந்த மாநில அரசுக்கு மாதத்திற்கு 80 கோடி ரூபாய் அளவிற்கு மக்கள் வரிப் பணம் விரயமாக்கப்பட்டு வந்திருப்பதை பார்க்கும்போது அரசியல்வாதிகளின் சுயநலக் கொள்கைகளும் பச்சோந்தித் தனமும் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது. தற்போது பஞ்சாபில் அந்த நடைமுறை நீக்கப்பட்டு எத்தனை முறை எம்.எல்.ஏ., எம்.பி-யாக இருந்தாலும் ஒரு தடவைக்கான ஓய்வூதியம் மட்டும்தான் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள், எம்.எல்.ஏ-க்களின் செலவினங்கள் எல்லாம் அரசு ஊழியர்களின் ஊதியத்தில் சேர்க்கப்பட்டு பூதாகரமாகக் காட்டப்படுகின்ற அசிங்கங்கள் ஈடேறி அரசாங்கத்திற்கு அதுதான் பெரிய சுமையாக உயர்த்தி காட்டப்படுகிறது என்கிற உண்மை பெரும்பாலான பொதுமக்களுக்குத் தெரியாமல் வைக்கப்பட்டுள்ளது.

அரசியல் சாசனம் கல்வி, சுகாதாரம், உணவு, இருப்பிடம், வேலைவாய்ப்பு ஆகிய மக்களின் அடிப்படைத் தேவைகளை ஆட்சியாளர்கள் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்று ஆட்சி செய்வதற்குப் பதிலாக இன்றைய அரசியல்வாதிகள் சாதி, மத. வர்க்க மோதல்களை ஏற்படுத்தி மக்களைப் பிளவுபடுத்தி அதன் மூலம் தேர்தல்களில் வென்று ஆட்சியமைக்கப் பார்ப்பதும் அது முடியாமல் போனால் மின்னணு வாக்குப்பெட்டிகளில் தில்லுமுல்லுகள் செய்து தேர்தல்களில் வெற்றிபெறப் பார்ப்பதும் அதுவும் பலனிக்காமல் போனால் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கி ஆட்சியைக் கைப்பற்றுவதும் இவை எல்லாவற்றிலும் தோல்வியடைந்தால் சட்டங்களைத் திருத்துவது, தங்களுக்கு தேவையான வகையில் சட்டங்களை மாற்றுவது போன்ற குறுக்கு வழிகளில் செல்ல ஆரம்பித்து மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான கடமைகளை செய்யாமல் தங்கள் சுயநலங்களுக்காக கட்சியையும், ஆட்சியையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி வருவது நீண்ட காலத்திற்கு பயன்தராது என்பதை உணர வேண்டும்.

இன்றுள்ள இந்திய அரசியல்வாதம் என்பது சாதாரண மக்களுக்கு ஒரு சட்டமாகவும், பெரும்புள்ளிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு ஒரு சட்டமாகவும் மாறியுள்ளது. இங்கு ஒரு குடிமகன் இரண்டு இடங்களில் வாக்களிக்க முடியாது ஆனால் ஒரு அரசியல்கட்சித் தலைவர் விரும்பினால் அவர் ஒரே நேரத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் இருந்து தேர்தலில் போட்டியிட முடியும். ஒரு குடிமகன் சிறையில் இருந்தால் வாக்களிக்க முடியாது. ஆனால் ஒரு அரசியல்வாதியோ அல்லது ஒரு தலைவரோ சிறையில் இருந்தாலும் தேர்தலில் போட்டியிடலாம். அதே போல ஒரு சாதாரண மனிதன் ஏதாவது ஒரு சிறிய குற்றத்திற்காக சிறைக்குச் சென்றால்கூட அவனுக்கு வாழ்நாள் முழுவதும் அரசு வேலைக்குச் செல்ல தடை விதிக்கப்படும். ஆனால் கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்ற பெரிய குற்றங்கள் செய்யும் தலைவர் எத்தனை முறை சிறையில் இருந்தாலும் அவர் தேர்தலில் தாராளமாக போட்டியிடுவது மட்டுமல்ல அவர் பிரதமராகவோ ஜனாதிபதியாகவோ கூட போட்டியிட வாய்ப்பளிக்கிறது இன்றைய ஜனநாயகம்.

ஒரு சாதாரண மனிதன் அரசு வேலை பெற பத்தாம் வகுப்பு படித்தவராகவோ அல்லது டிகிரி முடித்தவராகவோ இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவின் நிதியமைச்சராகவோ, கல்வி அமைச்சராகவோ ஆக அவர் கட்டைவிரல் ரேகை வைப்பவராக இருந்தாலே போதும். ஒரு குடிமகன் இராணுவத்தில் வேலைபெற குறிப்பிட்ட வயது வரம்பிற்குள் இருக்க வேண்டும். ஆனால் 130 கோடி மக்களுக்கான நலத்திட்டங்களை தீட்டுவதற்கும் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கும் தேர்ந்தெடுக்கப்படும் அமைச்சர்களோ படிப்பறிவே இல்லாதவர்களாகவோ, ஊனமுற்றவர்களாகவோ, 90 வயதைக் கடந்தவர்களாகவோ இருந்தாலும் கவலையில்லை. அவர் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்து இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைகளுக்கு கட்டளையிடலாம். ஒரு அரசு ஊழியர் 25 முதல் 30 ஆண்டுகள் சேவைக்குப்பிறகே ஓய்வூதியம் பெற நிபந்தனைகளும் காலவரைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. மக்களுக்கு சேவை செய்வதாக சொல்லி பதவிக்கு வந்து ஐந்து வருடம் லஞ்சம், ஊழல் மற்றும் எத்தனை அராஜகம் செய்தாலும் அவர்களுக்கு எந்த நிபந்தனையும் இன்றி வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப்படும். நமது நாட்டில் சட்டமும் நீதியும் அனைவருக்கும் சமம் என்பது மதுபாட்டில்களின் மேல் கண்ணுக்குத் தெரியாத எழுத்துக்களில் எழுதி வைக்கப்பட்டுள்ள 'குடி குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடல்நலத்தைக் கெடுக்கும்' என்று எழுதப்பட்டுள்ள வாசகத்தைப் போல்தான் உள்ளது.

ஏழைகள் தங்கள் வங்கிக் கடன்களை வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்த முடியாதபோது அவர்களின் வீடுகள் விற்கப்படுகின்றன. பணக்காரர்கள் தாங்கள் வாங்கிய வங்கிக்கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாதபோது வங்கிகள் விற்கப்படுகின்றன. இதுதான் இன்றைய இந்திய ஜனநாயகம். இலவசங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு ஆபத்து என்று உரையாற்றுகிற, உச்சநீதிமன்றத்தில் அரசுத்தரப்பில் வழக்குபோடுகிற பிரதமர்தான், குஜராத் தேர்தலில் ஆண்டுக்கு 2 கேஸ் சிலிண்டர்கள் இலவசம் என்ற தேர்தல் வாக்குறுதியை வழங்குகிறார். இதுதான் இன்றைய இந்தியாவின் அரசியல்வாதம்.

தமிழகத்தின் அரசியல்வாதமும் தரம்தாழ்ந்து கிடக்கிறதென்பதற்கு நிறைய உதாரணங்களைச் சொல்லலாம். இங்கே எதிர்கட்சியாக இருப்பவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது அளவுகடந்த பாசம், நேசம் வைத்திருப்பார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்களின் அனைத்து நியாயமான கோரிக்கைகளையும் நிறைவேற்றுவோம் என்பார்கள். அரசு ஊழியர்கள் நடத்துகிற கூட்டங்கள், கருத்தரங்கங்கள், மாநாடுகளில் கலந்து கொண்டு அவர்கள் கோரிக்கை நியாயமானதுதானே அதை ஆளும் அரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று முழக்கமிடுவார்கள். அவர்கள் கூறும் உறுதி மொழிகளை நம்பி ஆளும்கட்சியின் மக்கள்விரோதப் போக்கை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்கள் ஆட்சிக்கு வர அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பாடுபட்டு ஆட்சியில் அமர்த்தினால், பதவி நாற்காலியில் அமர்ந்ததும் அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களையே மறந்துவிடுவார்கள். எதிர்கட்சியாய் இருந்தபோது எடுத்து வைத்த நியாயங்களைப்பற்றியோ எதிர்த்துப் பேசிய உரிமைகளைப் பற்றியோ கொஞ்சம்கூட கண்டு கொள்ளமாட்டார்கள், அல்லது கொஞ்சம் பொறுங்கள் என்பார்கள், வலியுறுத்திக் கேட்டால் கொடுக்க மனமிருக்கிறது ஆனால் கஜானாவில் பணமில்லை என்பார்கள். இப்போதெல்லாம் அவர்களின் சமாளிப்பு 'கட்டாயம் சொன்னசொல் மாறமாட்டோம் கஜானா நிரம்பி வழியும் வரை காத்திருங்கள்' என்பதாக உள்ளது. விலைவாசி உயர்வுக்காக வழங்கப்படும் அகவிலைப்படியை வழங்கக்கூட கஜானா நிரம்ப வேண்டும் என்றால் இன்றைய ஆட்சியாளர்களின் அரசியல்வாதத்தை என்னவென்று சொல்வது?

இதன் பெயர் அரசியல்வாதம் அல்ல, அரசியல் வாதம் என்ற நம்பிக்கைத் துரோகம். அரசியலமைப்புச் சட்டத்தின் பெயரில் அரசியல்வாதிகள் இந்த நாட்டு மக்களுக்கு செய்து வரும் நம்பிக்கைத் துரோகங்களை துடைத்தெறிவதற்கான வழிகளை காணவேண்டிய அவசியம் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஏற்பட்டுள்ளது. அதைத் துவக்கி வைக்கும் ஆரம்பப் புள்ளியாக அரசு ஊழியர்களாகிய நாம் இருப்போம். சேலத்தில் நடைபெறும் மாநில பிரதிநிதிதுவ மாநாட்டில் மாற்றுவழி அரசியலை முன்னெடுப்போம். வளையாத அரசாங்கத்தை வளைய வைப்போம், விளையாத நிலங்களை விளைய வைப்போம். சளையாத போராட்டங்களால் பொழிய மறுக்கும் மேகங்களை பொழிய வைப்போம். இந்த இயக்கத்தின் மகாசக்தி என்னவென்று, வாக்குறுதி தந்து ஏமாற்றிய நம்பிக்கை துரோக அரசியல்வாதங்களுக்கு புரியவைப்போம். தோழமையே! புறப்பட தயாராவோம் போருக்கு. ●

## சூடா ஒரு கோப்பை சூப்

### வரிப்புலியே வா வெளியே!



வீதிக்கு வீதியிங்கே
வேர்விட்டுக் கிளைபரப்பும்
சாதிக் கொடி மரத்தை
சாய்க்க வரும் கோடாரி நீ!

புல்லின் நுனியிலும்
பூமிப்பந்தை நிலைநிறுத்தும்
வல்லமை படைத்தவன் நீ!
வரிப்புலியே வா வெளியே!

புது வேகத்தோடு புறப்படு
உன் உள்ளங்கை
விதி ரேகை என்பதை
விஞ்ஞான ரேகையாக்கு!

செவ்வாயில் செங்கரும்பு
சீக்கிரமாய் முளைக்கச் செய்!
எவ்வாய்க்கும் நிலாச்சோறு
இன்றைக்கே கிடைக்கச் செய்!!

– கவிஞர் தாராபாரதி

# இனி போராட்டம் ஒன்றே அரசுக்கு புரிய வைக்கின்ற மொழி!

1917 நவம்பர் 7ல் சோவியத் புரட்சி பெற்றது. தோழர் லெனின் தலைமையில் தொழிலாளர் ஆட்சி அமைந்த நூறு ஆண்டு தாண்டிய நிலையில் போராட்ட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அன்று நடைபெற்ற போராட்டத்தை தொடர்ந்து உலகெங்கும் உள்ள தொழிலாளர்களும் தங்களது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

இந்தியா அடிமைப் பட்டிருந்த காலத்திலும் சரி, சுதந்தரம் அடைந்ததற்கு பிறகும் சரி, பல்வேறு வீரமிக்கப் போராட்டங்கள் தமிழக விடுதலைக்காகவும் நடந்துள்ளன. அதன் ஒரு பகுதியாக மறுக்க முடியாத நிகழ்ச்சி ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மாணவர்கள் நடத்திய வீரம் செறிந்த போராட்டம் ஒரு மைல் கல்லாகும். இந்தப் போராட்டம் ஜல்லிக்கட்டுக்காக நடத்தியதாக உள்ளடக்கம் இருந்தாலும் இன்றைய ஆட்சியாளர்களின் மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளை சாடுகிற எண்ணமும் மாணவர்களிடத்தில் விளைந்திருக்கிறது என்பது இன்னொரு அம்சமாக பார்க்க வேண்டும். அந்த வகையில் அப்போராட்டம் இந்தியாவின் எதிர்காலத்தை நோக்கிய இந்திய ஜனவரி புரட்சி என்று அழைக்கப்பட்டது.

மாணவர்களின் இந்த புரட்சி நமக்கும், சமூகத்திற்கும், அரசியல்வாதிகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும் பல்வேறு படிப்பினைகளையும், எச்சரிக்கை உணர்வையும் தெரிவித்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. போராட்டம் உச்சபட்ச வெற்றியை, உறுதியான ஒற்றுமையுடன் சட்டத்தினை மாற்றுவதன் மூலமாக நடந்திருக்கிறது. போராட்டத்தை வளர விடாமல் முதலாளித்துவ குணம் கொண்ட ஆட்சியாளர்களின் முகமுடி கிழிந்து விடும் என்ற நோக்கத்திலேயே போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆனாலும் திட்டமிட்ட இலக்கான ஜல்லிக்கட்டு தடையை நீக்க சட்டம் இயற்றியது மிகப் பெரிய வெற்றியாகும்.

அதேபோல் தான், ஒன்றிய அரசு விவசாயிகளுக்கு எதிராக மூன்று வேளாண் சட்டங்களை நிறைவேற்றியது. அதை எதிர்த்து இந்தியாவிலுள்ள ஐநூறுக்கும் மேற்பட்ட சங்கங்கள் ஒன்றிணைந்து டில்லியில் ஒரு ஆண்டுக்குமேல் தொடர்ச்சியான வீரம் செறிந்த போராட்டத்தை (725பேர் இறந்த பிறகும்) விவசாயிகள் நடத்தியுள்ளார்கள். உலகமே வியந்து பார்க்கும் அளவிற்கு தொடர்ச்சியான போராட்டமாக அமைந்தது. இறுதியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ச்சியான விவசாயிகளின் போராட்டத்தினால் மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்தது.

இந்த இரண்டு போராட்டங்களிலிருந்தும் காவல் துறையினர் அணுகுமுறை ஒட்டுமொத்த போராடுபவர்களுக்கும், பொது மக்களுக்கும் பயத்தை உருவாக்க வேண்டும் என்பதன் சாராம்சமாக பார்க்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் அரசு ஊழியர், ஆசிரியர்களின் போராட்டம் இந்த விதத்தில்தான் அடக்கு முறையை சந்தித்து, அது பல பெற்றிகளை பெற்றது என்பது நாம் அறிந்ததே.

10.2.88ல் தொடங்கிய நமது போராட்டமும், அதனைத் தொடர்ந்த 1988ஆம் ஆண்டு நடைபெற்ற வீரம் செறிந்த போராட்டமும் மத்திய அரசுக்கு இணையான ஊதிய மாற்றத்தையும், போனசையும் பெற்றுத் தந்தது. எள்ளி நகையாடியவர்கள் கூட போராடினால் எதையும் பெற முடியும் என்பதை உணர வைத்த போராட்டமாக வழி காட்டியது.

ஆட்சியாளர்களின் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக தொழிலாளர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு, அப்போதிருந்த அரசின் கொள்கை முடிவு நம்மையும் விட்டு வைக்கவில்லை. போனஸ், சரண்டர் விடுப்பு, ஓய்வூதியப் பலன்கள் பறிக்கப்பட்டன. உரிமையை மீட்டெடுக்க அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்

2003ல் நடத்திய வீரம் செறிந்த வேலை நிறுத்தப் போராட்டம் தான் அரசின் அடக்கு முறையிலிருந்து நம்மை மீட்டெடுத்தது. நாம் நடத்திய இந்த வேலை நிறுத்தம் நம் உரிமை மீட்புக்கு அடித்தளமாக இருந்தது. பொது மக்கள் மற்றும் பலதரப்பு சமூகத்தையும் ஈர்த்தது இந்த போராட்டம் தான்.

ஆனாலும் ஆட்சியாளர்கள் தங்களது கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை. தொடர்ந்து மக்கள் விரோத நடவடிக்கைகளையும், தொழிலாளர் விரோத நடவடிக்கைகளையும் தொடர்ந்த நிலையில் புதிய பென்சான் திட்டமும், சிறப்புக் காலமுறை ஊதிய அவலமும் தொடர்ந்தது. மீண்டும் ஒருங்கிணைந்த போராட்டம் சாத்தியமில்லாத நிலையில் அடக்குமுறையை சந்தித்த அதே அரசிடம் 2014ஆம் ஆண்டு தன்னந்தனியாக நாம் நடத்திய காலவரையற்ற வேலை நிறுத்தம், மறியல், காத்திருப்பு போராட்டம் போன்றவை புதிய பென்சன் திட்டம் உட்பட முதலமைச்சரை சட்டமன்றத்தில் ஒரே நாளில் 110 விதியின் கீழ் 13 அறிவிப்புகள் வெளியிட வைத்தது அரசு ஊழியர்களுக்கு உற்சாகமளித்த இந்த போராட்டம் இளைஞர்களை கவர்ந்திழுத்தது.

ஆனால் கடந்த ஆட்சியில் போராடி ஒரு சில கோரிக்கைகள் பெற்று இருந்தாலும், நாம் எதிர்பார்த்த பழைய பென்சன், ஊதிய மாற்றம், சிறப்பு காலமுறை ஊதியம் மாற்றம், காலிப் பணியிடம், சரண்டர், அகவிலைப்படி, போனஸ், தொகுப்பூதியம் உள்ளிட்ட நிலுவைக் கோரிக்கைகள் தீர்க்கப்படாத அவலம் தி.மு.க. அரசிலும் தொடர்நது நீடித்துக் கொண்டு இருக்கிறது. புதிய அரசு குறிப்பாக கழக அரசு வந்தால் அரசு ஊழியர், ஆசிரியர் கோரிக்கைகள் அனைத்தும் தீர்க்கப்படும் என்று தேர்தல் காலத்தில் வாக்குறுதி தந்த தமிழக முதல்வர், ஆட்சிக்கு வந்து இரண்டாண்டு நெருங்கக் கூடிய நிலையில், எந்த விதமான கோரிக்கைகளும் தீர்க்கப்படாமல் இருப்பதோடு, அரசுத் துறைகளில் இனிமேல் நிரந்தர ஊழியர் இல்லை. ஓய்வூதியம் என்ற நிலைப்பற்றி சமூக நிதிக்கு எதிரான அரசு ஆணை 152, 115,139 என்று பல்வேறு அரசு ஆணைகளை போடப்பட்டு அத்துக்கூலி முறையை தொடர்ந்து கடைபிடிக்கும் இந்த அரசை எதிர்த்து மீண்டும் ஒரு போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அரசியல் சூழ்நிலை ஒரு பக்கமும், அரசின் மௌனம் மறு பக்கமும் தொடர்கிறது.

இந்நிலையில் தான் சேலத்தில் நடைபெறும் மாநில பிரதிநிதித்துவப் பேரவை புதிய பென்சன் ரத்து, சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் மற்றும் அகவிலைப்படி, சரண்டர், காலிப் பணியிடம், சாலைப்பணியாளர்களுக்கு 41 மாத பணிக்காலமாக வழங்குதல் உள்ளிட்ட நிலுவைக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு வலுவான இயக்கத்திற்கு இப்பேரவை திட்டமிட வேண்டியுள்ளது.

ஒன்றிய மாநில அரசுகள் பண்பாடு கலாச்சாரம் உள்ளிட்ட உரிமைகளை தகர்ப்பதில் காட்டும் முனைப்பை தொழிலாளர் நலன் குறித்து காட்டுவதாகவோ, கவலைப்படுவதாகவோ தெரியவில்லை. 2021 சட்டமன்ற கூட்டத்தில் ஆளுநரின் உரையில் இதுவரை இல்லாத நிகழ்வாக அரசு ஊழியர் நலன் தொடர்பாக எந்தவித அறிவிப்பும் இல்லை என்பது ஏமாற்றமளிக்கிறது. ஆளும் அரசுகள் நாம் போராடிப் பெற்ற உரிமைகளை நமது கரங்களிலிருந்து பறித்துக்கொள்ளும் நிலைக்குத் தான் மீண்டும் மீண்டும் தள்ளப்பட்டுள்ளோம். போராட்டம் மட்டும் தான் அரசிடம் நாம் பேச வேண்டிய அரசுக்கு நாம் புரிய வைக்க வேண்டிய தெளிவான மொழி என்றாகி விட்ட நிலையில் பெற்ற உரிமைகள் பெற வேண்டும். உரிமைகள் அனைத்திலும் போராட்டம் என்ற பேராயுதம் தான் விடையளிக்கும் என்று உறுதியோடு நாம் பயணத்தை அடக்கு முறைக்கு அஞ்சாமல் மாநில பிரதிநிதித்துவப் பேரவை காட்டிடும் வழியில் தொடர்வோம். ●

**தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின்**

## மாபெரும் இயக்கம்



தொடர்

# டீ வித் காம்ரேட்!

**- ஜிஜி**

காம்ரேட், டீ சூடு ஆறி விடுவதற்குள் சில விடயங்களை கதைத்து விடுவோம்.

உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா 1.4.2003 தமிழகத்தின் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை இந்தியாவே பரிதாபத்தோடு பார்த்த நாள். அந்த நாளில் என்ன நடந்தது என்று உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியதில்லை. இந்தியாவிலேயே முதன்மாநிலமாக புதிய பென்ஷன் திட்டத்தை செல்வி.ஜெயலலிதா அம்மையார் கொண்டுவந்த நாள். அதை திரும்பப் பெற வலியுறுத்தி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் 19 ஆண்டுகளாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் சமீபத்தில் இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். அப்படியே ஒரு நிமிடம் தலை சுத்திருச்சு. எம்.எல்.ஏக்களும் எம்.பி.க்களும் ஒருமுறை அப்பதவியில் வெற்றிபெற்று எம்.பி.ஆகவோ, எம்.எல்.ஏ-வாகவோ ஐந்தாண்டுகள் பதவியில் இருந்திருந்தாலே அவர்களுக்கு சாகும்வரையில் நிரந்தர பென்ஷன் உண்டாம். ஒரு அரசு ஊழியர் பென்ஷன் வாங்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 20 ஆண்டுகளாக பணி செய்திருக்க வேண்டும். ஆனால் எம்.எல்.ஏ, எம்.பி-க்களுக்கு மட்டும் ஐந்தாண்டுகளாம். என்ன அநியாயம் இது காம்ரேட்.

அந்த செய்தியில் அடுத்த சில வரிகளைப் படித்தபோது கண்ணைக் கட்டிடுச்சி காம்ரேட். ஒரு எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. ஒரு முறைக்கு மேலாக சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகவோ செயல்பட்டிருந்தால் அவர் எத்தனை முறை அப்பதவியில் இருந்தாரோ அத்தனை முறைக்கும் அவருக்கு பென்ஷன் உண்டாம். பஞ்சாப் மாநிலத்தில் இருந்துவந்த இந்த நடைமுறையை பஞ்சாபில் புதிதாக ஆட்சி அமைத்துள்ள ஆம் ஆத்மி கட்சியின் முதல்வர் பகவத் சிங் மான் தலைமையிலான அரசு முதல் சிக்கன நடவடிக்கையாக, ஒருவர் எத்தனை முறை எம்.எல்.ஏ-வாக இருந்திருந்தாலும் அவரது ஒரு பதவி காலத்துக்கான ஓய்வூதியம் மட்டுமே இனி வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. இதன்மூலம் பஞ்சாப் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.80 கோடி மீதமாகுமாம். இங்கும் அந்த சிக்கன நடைமுறைகள் மேல்மட்டத்திலிருநது நிகழ்ந்தால் கஜானாவில் ஓட்டை விழுவது தவிர்க்கப்படும். இத்தகைய சமூக அநீதிகள் எல்லாம் நிதியமைச்சருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று நம்புவோம்.

பென்ஷனைப்பற்றி பேசும்போது சில விஷயங்களை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டியது

Government of Punjab
Department of Finance
(Finance Pension Policy and Coordination Branch)

**Notification**

Dated 18th November, 2022

No. 02/01/2022-2FPPC/153 In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, and all other powers enabling him in this behalf, the Governor of Punjab is pleased to notify that all the government employees who are presently being covered under the Defined Contributory Pension Scheme also referred to as National Pension System (NPS) will be given the benefits of Old Pension Scheme (OPS).

2. Detailed scheme and Standard Operating Procedures pursuant to this notification shall be notified by the State Government in due course of time.

Ajoy Kumar Sinha, IAS
Principal Secretary to Government of Punjab
Department of Finance

No. 02/01/2022-2FPPC/154 Dated, Chandigarh, the 18th November, 2022

A copy is forwarded to the following for information and necessary action:-

1. All Heads of the Departments;
2. Registrar, Punjab and Haryana High Court;
3. Commissioners of Divisions;
4. District And Session Judges;
5. All the Deputy Commissioners;
6. District Treasury Officers & Treasury Officers in the Punjab;

Jaswinder Singh
(Jaswinder Singh)
Under Secretary Finance

அவசியமாகத் தோன்றுகிறது. அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதாக டெல்லி முதல்வர் அறிவித்திருந்த நிலையில் அதைத் தொடர்ந்து சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ராஜஸ்தான் மாநிலங்களும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டுவர அறிவிப்புகள் வெளியிட்டு நடைமுறைப் படுத்த ஆரம்பித்துள்ளன. சமீபத்தில் பஞ்சாப் மாநிலமும் அதில் சேர்ந்திருக்கிறது. பஞ்சாப் முதல்வர் பகவத் சிங் மான் புதிய ஓய்வூதியத் திட்டத்தில் இருப்பவர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இருக்கும் பலன்கள் வழங்கப்படும் என்பதை அரசு கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார். (அதற்கான அரசு கடிதத்தின் நகல் இங்கே வெளியிடப்பட்டுள்ளது.) நமக்கு இங்கே ஒரு பெரிய சந்தேகம் எழுகிறது. பிற மாநிலங்கள் எல்லாம் பழைய ஓய்வூதியத்திட்டத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் நாங்கள் ஆராய்கிறோம், பரிசீலிக்கிறோம், நடைமுறைச் சிக்கலைப் பார்க்கிறோம் என்று ஆயிரத்தெட்டு பாட்டிக் கதைகளை நம் காது புளிக்கும் அளவுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நமது முதல்வர் யோசிப்பதைப் பார்த்தால் இந்தியாவில் அனைத்து மாநிலங்களும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்திவிட்ட பிறகும்கூட ‘நம்பிக்கையுடன் இருங்கள் நான் நிச்சயம் நிறைவேற்றுவேன்’ என்று நமக்கு ஆறுதல் கூறுவார் போல.

பென்ஷன் பற்றி பேசுவதால் இந்த விஷயத்தையும் உங்கள் காதுகளுக்குள் புகுத்தி விடுவது நியாயம் என்று தோன்றுகிறது. அமிதாப் பச்சன், ஜெயாபச்சன், அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா பச்சன் ஆகிய நால்வருக்கும் தலா ஐம்பதாயிரம் பென்ஷன் மாதந்தோறும் வழங்கும் என உத்திர பிரதேச அரசு அறிவித்துள்ளது. இந்தியாவில் வறுமைக் கோட்டில் இருக்கும் இந்த நால்வரும் இனிமேல் வாழ்வாதாரத்துக்கு கஷ்டப்படத் தேவையில்லை. இந்த ரேஞ்சுல அரசாங்கங்கள் நடந்தால் இந்தியா சீக்கிரம் வல்லரசாகிவிடும்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சமூக நீதி, இட ஒதுக்கீடு, மக்கள் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று அவ்வப்போது மார்தட்டிக் கொள்கிறார் முதல்வர். அதை கேட்கும்போது நமக்கும் பெருமிதமாகத்தான் இருக்கிறது. ஆனால் அதே சமயம் சமூகநீதி இடஒதுக்கீட்டுக்கு எதிரான அறிவிப்புகளை வெளியிட்டு தன் அரசின்மீதான நம்பிக்கையை தாழ்த்தி விடுகிறார். சென்ற மாதத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சி அமைப்புகளில் அவுட்சோர்சிங் முறையில் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது அதை முற்றிலும் தனியார்மயப் படுத்தும் நோக்கத்தை நிறுவுவதற்காக ஒரு குழுவையும் அமைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டு அரசு ஊழியர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியது. சொல்வது ஒன்றும் செய்வது வேறாகவும் ஆகிவிட்ட தமிழக முதல்வர் நல்லவரா கெட்டவரா என்ற சந்தேகம் இதன்மூலம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிறது. இதே நேரத்தில் ஒப்பந்தப் பணிக்க நிரந்த முடிவு கட்டுவதாக ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்ததோடு மட்டும் நில்லாமல் தன்னுடைய அரசாங்கத்தில் ஒப்பந்த ஊழியர்கள் அனைவரும் முறைப்படுத்தப்படுவார்கள் என அறிவித்துள்ளது பாலைவனத்தில் ரோஜாப்பூ பூத்தமாதிரி இருக்கிறது. அது சிறிய மாநிலம்தான் 57000 ஒப்பந்த ஊழியர்கள் மட்டும்தான் என்றாலும் செய்ய வேண்டும் என்று நினைத்த மனம் பெரிது. அதை பாராட்டத்தான் வேண்டும்.

பட்டினிக் குறியீட்டில் இந்தியா, பாகிஸ்தான் இலங்கை பங்களாதேஷ் போன்ற பலநாடுகளை விட கீழிறிங்கிவிட்டதாக செய்திகள் வர ஒரு உண்மையான அரசாங்கம் அதை சரிசெய்யும் பணிகளை முடுக்கி விடுவதுதானே ஆக்கபூர்வமானதாக இருக்கும்.அதை விடுத்து அந்த புள்ளி விவரம் தவறானது. ஒரு சில ஆயிரம் பேர்களில் எடுத்த மாதிரிகளைக்கொண்டு எடுக்கப்பட்டுள் புள்ளிவிவரம் சரியானதாக இருக்காது என்று பாஜக தலைவர்கள் கூறுவது சென்ற மாதம் நகைப்பிற்கிடமானது. அப்படி பார்த்தால் எந்த புள்ளிவிவரமும் சரியானதில்லை என்ற கருத்திற்குத்தான் வரவேண்டியதிருக்கும். இந்த பட்டினி விவகாரம் குறித்து மத்திய அமைச்சர் ஸ்மிருதி ராணியிடம் நிருபர்கள் கருத்து கேட்டபோது அவர் சொன்னது.

''இந்தியாவில் ஸ்விக்கி, சொமோட்டோ போன்ற நிறுவனங்கள் 24 மணி நேரமும் வீட்டுக்கே வந்து உணவு கொடுத்துக் கொண்டிருக்க சிலர் பட்டினி கிடந்தால் அது அரசாங்கத்தின் தவறு அல்ல.'' ஒரு ஒன்றிய அமைச்சர் இப்படி பதில் சொன்னால் நாடு நல்லா விளங்கிடும்.

இங்கிலாந்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் பிரதமரானதை எல்லோரும் பாராட்டியது பிரமாதமானதில்லை, பாஜகவினர் பாராட்டியதுதான் பிரமாதமாக இருந்தது. இவர்கள்தான் சோனியாகாந்தி பிரதமராக பதவியேற்கத் தயாரான போது அவர் இத்தாலியைச் சேர்ந்தவர் அவர் பதவி ஏற்கக் கூடாது என்று தீவிரமாக எதிர்த்தார்கள். அவர்கள் கொள்கைக் கூற்றுப்படி இங்கிலாந்திலேயே பிறந்து, இங்கிலாந்து குடிமகனாக வளர்ந்து, இங்கிலாந்து அரசியலில் ஈடுபட்ட ரிஷி சுனக் இந்தியர். ஆனால் இந்தியக் குடியுரிமை பெற்று கடந்த 52 ஆண்டுகளாக இந்தியாவிலேயே வாழ்ந்து, இந்திய அரசியலில் ஈடுபட்டு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த சோனியா காந்தி இந்தியர் இல்லை அந்நியர். என்னே நியாயம் இது?



''சமைத்து சாப்பிடுவது நல்லதா?
பச்சையாக சாப்பிடுவது நல்லதா?''

''பச்சையாக சாப்பிடுவதுதான் நல்லது''

''எதை வைத்து அப்படிச் சொல்ரே?''

''கேஸ் விலையை வச்சுத்தான்''!

– மதுக்கூர் இராமலிங்கம்

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த தெய்வங்களின் ஆசி மிகவும் முக்கியம் என டெல்லி முதல்வர் கூறியிருக்கிறார். என்னதான் எலக்ஷன் டிரெண்ட் என்றாலும் அவர் அவர் இப்படி பேசியது வியப்பாகத்தான் இருந்தது. அந்தக் கருத்தை கூறிவிட்டு அதோடு நிறுத்தியிருக்கலாம். அதற்கு ஒருபடி மேலே போய் ரூபாய் நோட்டுக்களில் காந்தி படத்துடன் பிள்ளையார் மற்றும் லட்சுமி தெய்வங்களின் படத்தை அச்சிடலாம் என மத்திய அரசுக்கு ஆலோசனை வேறு கூறியிருக்கிறார். பாஜக கட்சியினர் கெஜ்ரிவால் அவர்களின் இந்தப் பேச்சைக் கேட்டு அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். நாம் பேசவேண்டிய பேச்சை இந்த ஆள் பேசிட்டாரேன்னு. நமக்கென்ன பயமாக இருக்கிறது என்றால் இந்தக் காமெடிகள் எல்லாம் உண்மையாகி விடுமோ என்றுதான்.

சமீபத்தில் படித்த ஒரு ஹைக்கூ மீண்டும் மீண்டும் நினைவில் வந்து கொண்டே இருக்கிறது டீயின் கடைசி சொட்டு போல

**நிமிர்ந்து நின்றது புல்**
**வளைத்துக் காட்டியது**
**மழைத்துளி!**

●

**புதுச்சேரி அரசு ஊழியர் சங்கங்களின் சம்மேளனம்**
**47 ஆம் ஆண்டு அமைப்புதின விழா மற்றும் கருத்தரங்கம்**



# கொத்தடிமை அத்தக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் அரசாணை எண் 115 ஐ ரத்து செய்திடுக!

தமிழக அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை 18.10.2022ஆம் தேதி வெளியிட்ட வெளிமுகமை மூலம் அரசுப்பணிக்கு ஆட்களை நியமிக்கும் அரசாணை நிலை எண்.115ஐ உடனடியாக நீக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம் உள்ளிட்ட, பெரும்பாலான துறைவாரி சங்கங்களிடமிருந்தும் சில அரசியல் கட்சிகளிடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில் தமிழக முதல்வர் உடனடியாக மேற்படி அரசாணை எண்.115ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு வரம்புகளை ரத்து செய்வதாக கூறியுள்ளதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வரவேற்கிறது. நாம் அரசாணையை எதிர்ப்பதற்கான நியாயங்களை முதல்வர் உடனடியாக உணர்ந்து கொண்டதற்கு நன்றி.

அதே சமயம் ஆய்வு வரம்புகளை மாற்றியமைப்பதும், சீரமைப்பதும் மட்டுமே இதற்கு தீர்வாகிவிடாது என்பதை முதல்வர் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இந்த முழு அரசாணையுமே சமூகநீதிக்கு எதிரானது என்பதை உணர்ந்து கொண்டு அரசாணையை ரத்து செய்வதுததான் சமூக நீதிக்காக போராடும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு பெருமை சேர்ப்பதாக இருக்கும்.

மேலும் தற்போதைய மக்கள் தொகை அடிப்படையில் கூடுதல் பணியிடகள் உருவாக்கப்படும் நம்பிக்கையில் இருந்த மாநகராட்சி, நகராட்சி ஊழியர்களுக்கு ஏற்கெனவே இருந்த பணியிடங்கள் குறைக்கப்பட்டும் குறிப்பாக 'டி' கிரேடு அடிப்படை ஊழியர் பணியிடங்கள் அனைத்தும் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் ஓய்வுக்குப் பிறகு அப்பணியிடங்களை நிரப்பாமல் எதிர்வரும் காலங்களில் அப்பணிகளை வெளிமுகமை மூலம் நிரப்பிக் கொள்ளலாம் என அரசாணை எண்.152ஐ வெளியிட்டு மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள நிரந்தர பணியிடங்களை ஒழித்துவிட்டு அத்துக்கூலிகளை உருவாக்க வழிசெய்துள்ள சமூக அநீதி அரசாணை எண்.152ஐயும் ரத்து செய்திட வேண்டியதும் அவசியமானதாகும். இது தமிழக முதல்வர் தன்னுடைய தேர்தல் வாக்குறுதியில், பத்தாண்டுகளுக்கு மேலாக தினக்கூலி, தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் வெளிமுகமை மூலம் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரப்படுத்தி காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவித்த கருத்துக்கு முற்றிலும் எதிர்மாறான கருத்தாக அரசாணையாக வெளிவந்துள்ளது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது.

1. வெளிமுகமை மூலம் அரசுப்பணிக்கு ஆட்களை நியமிக்கும் அரசாணை நிலை எண்.115ஐ ரத்து செய்திடுக.
2. பேரூராட்சி செயல் அலுவலர் பணி நீங்களாக மீதி அனைத்து பணியிடமும் தனியாரிடம் ஒப்படைக்கும் அரசாணை எண் 139 ஐ ரத்து செய்திடுக.
3. மாநகராட்சி, நகராட்சிகளில் பணிபுரியும் அடிப்படை ஊழியர்களை அத்துக்கூலிகளாக மாற்றக்கூடிய அரசாணை எண்.152ஐ ரத்து செய்திடுக.
4. வாழ்வாதார பழைய ஓய்வூதியம், அகவிலைப்படி, சரண்டர் வழங்கிட அரசாணை வெளியிடுக.
5. சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், MRB செவிலியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதிய பிரிவினருக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம் வழங்கிடுக.
6. நிதி செலவினம் இல்லாத சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக வரையறுத்திடுக.

தனியார் மயக் கொள்கைகளை எதிர்த்து வரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போன்ற அமைப்புகளுக்கு ஆதரவாக, பாதுகாவலனாக நின்ற முதல்வரின் அமைச்சரவையிலிருந்து அந்த நிலைப்பாட்டிலிருந்து விலகி ஒரு அரசாணை வெளிவருவது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் சமூகவியலாளர்கள், நடுநிலையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் ஆச்சர்யங்களைத் தோற்றுவித்துள்ளதை முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரையில் காலிப்பணியிடங்கள் அதிக அளவில் உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை முதல்வருக்கு யாரும் சொல்லத் தேவையில்லை. நிர்வாகத்தில் வேலைகள் தொய்வாக நடக்கிறது என்று அரசு கருதினால் அதில் சீர்திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர தனியார்வசம் அவற்றை ஒப்படைத்து விடுவதால் மட்டும் அந்தப்பணிகள் செம்மையாக நடந்துவிடும் என்பது நிதி மற்றும் பொருளாதார வல்லுநர்களின் அதீத கற்பனை.

ஒரு அரசாங்கம் தன்னுடைய ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் அதிகமாக இருப்பதால் அதை தனியார் வசம் ஒப்படைத்து விட முற்படுவது மிகவும் துரதிருஷ்டமானதாகும். அரசாங்கம், அதுவும் ஒரு மக்கள் நல அரசாங்கம் என்பது லாப நட்ட கணக்குகளை பார்க்கும் இடம் அரசு ஊழியர்கள் அதிகாரிகள் பணிபுரியும் இடங்கள் அல்ல. அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்களையும், படிகளையும், ஓய்வூதியங்களையும் குறைப்பது என்ற ஆபத்தான போக்கிலிருந்து விலகி தற்போது அவற்றை முற்றாக ஒழித்து விட்டு தனியார்வசம் குறைந்தவிலைக்கு அரசாங்கத்தை விற்றுவிட தீர்மானித்திருப்பதுதான் அரசாணை எண்.115ன் நோக்கம்.

ஒருபுறம் சமூக நீதி, மக்கள் நலன், ஊழியர் நலனில் அக்கறை, பழைய ஓய்வூதியத்தை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற வாக்குறுதிகளை மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அளித்துவிட்டு மறுபுறம் அரசாங்கத்தை கார்ப்பரேட் மயமாக்குவதற்கான முயற்சிகளில்

இறங்கியுள்ளதற்கான கருவிகளாகவே அரசாணை எண்.115 மற்றும் அரசாணை



**அப்பா:**
"மகனே நான் சொல்ற
பேச்சைக் கேளுடா?"

**மகன் :**
"கேட்க முடியாது... நான்
கை நிறைய சம்பாதிக்க
ஆரம்பிச்சுட்டேன்."

**அப்பா :**
"உனக்கு 4 மாடு வாங்கிக்
கொடுத்தது தப்பா போச்சு.
உன்னையெல்லாம்
B.E., B.Tech., MBA, MCA -ன்னு
படிக்க வச்சு தெருத்தெருவா
அலைய விட்டு இருக்கணும்."


எண்.152ஐ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பார்க்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த 'சீரமைப்பு' 'மனிதவளம்' போன்ற வார்த்தைகளை தவிர்த்து அரசாணைகளின் சில பகுதிகளை மட்டுமல்ல அரசாணையையே ரத்து செய்து உத்தரவிடுவதுதான் 'திராவிட மாடல் ஆட்சி'க்கு அர்த்தமுள்ளதாக இருக்கும்.

தமிழக முதல்வர் அவர்கள் காலை சிற்றுண்டியை பரீட்சார்த்த முறையில் குறிப்பிட்ட சில இடங்களில் அமல்படுத்தியுள்ளது பெரிய வரவேற்பை பெற்றுள்ள நிலையில் அவற்றை தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது. மேலும் மேற்படி திட்டத்தை வெளிமுகமை மூலமாக செயல்படுத்துவதை தவிர்த்து அதை சத்துணவு ஊழியர்களைக் கொண்டே நடத்துவதற்கான அரசாணையை வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

நிதி செலவினம் இல்லாத சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக வரையறுத்தல் மற்றும் கருவூலம் மூலம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கிடுதல், சத்துணவு, அங்கன்வாடி உள்ளிட்ட பிரிவினருக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம் வழங்கிடுதல் போன்ற சில கோரிக்கைகளில் கூட முதல்வர் மனம் செலுத்தாமல் மௌனமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இதுபோன்ற அவுட்சோர்சிங் பணியிடங்களை ஏற்படுத்துவதில் முனைப்பாக உள்ளது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் மிகப்பெரிய மனக்குமுறல்களை ஏற்படுத்தியுள்ளது. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி, சரண்டர் உள்ளிட்ட வாழ்வாதார பழைய ஓய்வூதியம் போன்றவற்றை கொரோனா காலத்திற்குப் பிறகும் தொடர்ச்சியாக நிறுத்தி வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகள் திராவிட மாடல் ஆட்சியின் சமூக நீதிக் கொள்கைகளுக்கு எந்தவிதத்திலும் ஏற்புடையதாக இருக்காது.

எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் அரசாணை எண்.115, 139 மற்றும் 152 ஆகியவற்றை உடனடியாக ரத்து செய்வதோடு, சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக வரையறுத்திடவும், சத்துணவு, அங்கன்வாடி உள்ளிட்ட பிரிவினருக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம் வழங்கிடவும், மற்றும் அகவிலைப்படி, சரண்டர் உள்ளிட்ட வாழ்வாதார பழைய ஓய்வூதியம் வழங்கிடவும் அரசாணைகள் வெளியிட்டுஅரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். அகவிலைப்படி மற்றும் சரண்விடுப்புக்கான ஊதியத்தை பணமாக பெற்றுக்கொள்ளும் உரிமைக்கான அறிவிப்பினை இனியும் தாமதிக்காமல் உடனடியாக செயல்படுத்திடக் கேட்டுக் கொள்கிறோம்.

- மு. அன்பரசு, மாநிலத் தலைவர்
- ஆ. செல்வம், பொதுச் செயலாளர் ●



ரூபாய் நோட்டில் தன் படத்தை போடச் சொன்னதற்காக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் நடிகை லட்சுமி.

கட்டுரை

# இலங்கையின் புதிய அத்தியாயம்!

*33 நாட்களிலேயே ராஜபக்சேவின் ராஜ்ஜியத்தை சுருட்டி விட்டார்கள் இலங்கை மக்கள். இனரீதியாக, மொழி ரீதியாக எந்த மக்களை இலங்கை ஆளும் வர்க்கம் பிரித்து வைத்திருந்த தோ அதே மக்கள், இனம், மொழி, மதம் என அனைத்தையும் தூக்கியெறிந்துவிட்டு ஒரே உரு வமாக, ஒரே வர்க்கமாக எழுந்து நின்றனர்; இது காறும் அதிகாரத்தின் துணை கொண்டும் இன வெறி கிளப்பியும் தங்களை பீடித்திருந்த ஆட்சியா ளர்களின் அடித்தளத்தையே அசைத்தனர்; 2005ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் எதேச்சதி காரியாக - யாருக்கும் அஞ்சாதவர் என்ற மமதை யிலிருந்த மகிந்த ராஜபக்சேயை அடிபணிய வைத்தனர்.*

மக்கள் சக்தியே மகத்தான சக்தி என்பதை நிரூபித்து காட்டியுள்ளனர் இலங்கை மக்கள். பிரதமர் பதவியிலிருந்து மகிந்தாவை ஓட வைத் துள்ளனர். ஆனால் இன்னும் இலங்கை மக்களின் முழு இலக்கு நிறைவேறவில்லை. கோத்தபய வும் வெளியேற வேண்டும். இலங்கை அமைச்சர வையிலும் அதிகாரத்தின் முதன்மைப் பதவிகளி லும் 40 பேர் ராஜபக்சே குடும்பத்தினர்தான். எதேச் சதிகாரிகள் யாரையும் நம்ப மாட்டார்கள். எல்லா இடங்களிலும் குடும்பத்தினரையே அமர்த்து வார்கள்.

உலகின் அனைத்து முதலாளித்துவ - நில பிரபுத்துவ ஆட்சியாளர்களைப் போலவே மகிந்த ராஜபக்சேயும், கோத்தபய ராஜபக்சேயும் மிகத் தீவிரமாக நவீன தாராளமயக் கொள்கைகளை யும் அமலாக்கினர். உற்பத்திப் பொருளாதாரம் அல்லாத இலங்கை, பிரதானமாக சுற்றுலா வரு மானத்தையே நம்பியிருந்த பின்னணியில், எந்தவிதமான பெரும் தொழில் மற்றும் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்ளும் திசையில் ஆட்சி நடக்காத நிலையில், கொரோனா ஊரடங்கு காலம் இலங்கையின் பொருளாதாரத்தை நொறுக்கியது. கையில் இருந்த அந்நியச் செலாவணி ஒட்டு மொத்த மும் தீர்ந்தது. அரசாங்கமே சில நாட்களில் ஓட்டாண்டியாக மாறியது. சர்வதேச கடன்கள் கழுத்தைப் பிடித்தன. தப்பிக்க வழிதெரியாத ராஜ பக்சேக்களின் அரசு, மக்கள் மீது அனைத்து சுமைகளையும் ஏற்றியது. விலைவாசி விண்ணைத் தாண்டியது. திட்டமிடாமல் இறக்கு மதியை நிறுத்தியதால் பொருட்கள் தட்டுப்பாடு தீவிரமடைந்தது. உணவு இல்லை; எரிபொருள் இல்லை; வேலையில்லை; கையில் காசுமில்லை. கொதித்தெழுந்தது இலங்கை.

மக்கள் வீதிக்கு வருவார்கள் என்றும் இனம், மொழி வேறுபாடுகளை மறந்து கரம் கோர்ப்பார்கள் என்றும் சற்றும் எதிர்பார்த்திருக்க வில்லை ராஜபக்சே அரசு. மக்கள் ஒன்றுபட்டார் கள். அரசியல் வேறுபாடின்றி தமிழ் மக்களும் சிங்கள மக்களும் மலையக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும் பெரும் போராட்டக் களத்தில் இறங்கினார்கள். சமீப நாட்களில் உலகின் மிகப் பெரும் மக்கள் எழுச்சியைக் கண்ட நகரமாக மாறியது கொழும்பு. ஒரு மாத காலத் திற்குப் பிறகு வேறு வழியில்லாமல் பிரதமர் மகிந்தாவை ராஜினாமா செய்ய வைத்து பணிந்தி ருக்கிறது கோத்தபய அரசு. அவரும் வெளியே றும் நிலை வரும். மக்களின் எழுச்சி இலங்கை யின் வரலாற்றில் புதியதோர் மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.

●

# நிதியமைச்சரின் சமூகநீதி!

**நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கு ஒரு அரசு ஊழியரின் கடிதம்.**

''சமூகநீதி'' என்ற வார்த்தைக்கு புதிய பொழிப்புரை எழுதிய கார்ப்பரேட்டுகளின் கனவு நாயகரே!

உங்களது தாத்தா P.T.ராஜன், உங்களது தந்தை P.T.R.பழனிவேல்ராஜன் ஆகியோர் அரசியலில் சம்பாதித்த பணத்தில் நீங்கள் வெளிநாட்டில் படித்தீர்கள். அதனால்தானோ என்னவோ அகவிலைப்படியும். பழைய பென்சன் திட்டமும் நாங்கள் இரத்தம் சிந்தி வாங்கிய வரலாறு உங்களுக்குத் தெரியாமல் உள்ளது, OAP (வயது முதிர்ந்தோர் பென்ஷன்) வாங்குபவருக்கும், ஒரு அரசு ஊழியர் DA அகவிலைப்படி பெறுவதற்கும்கூட வித்தியாசம் தெரியாமல் பேசுகிற ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா உங்களது "திராவிட மாடல்" ஆட்சியில் OAP யை 2000 ம் ஆக கூட உயர்த்துங்கள் அல்லது 5000 கூட கொடுங்கள் அரசு ஊழியருக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எந்த அரசு ஊழியரும் பணியில் சேர்ந்த உடன் ஒரு லட்சம் ஊதியம் பெற முடியாது என்பதை அறியாதவரா நீங்கள்-?. ஆனால் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் ஊதியம் அதிகம், சலுகைகளும் அதிகம் அதை வேண்டாம் என்று கூறுவதுதானே சரியான சமூகநீதியாக இருக்கும். உண்மை அதை மட்டும் ஏன் நீங்கள் கூறுவது இல்லை.

இந்த அரசு ஊழியர்களின் ''தபால் வாக்கு'' மூலமாக உங்களது சட்டமன்ற உறுப்பினர்கள் எத்தனை பேர் வெற்றி பெற்றார்கள் என்று கொஞ்சம் ஞாபகப்படுத்தி பாருங்கள். சமூக போராளியே! ''குரங்கு கையில் பூமாலை'' கொடுத்தது இந்த அரசு ஊழியர்கள் தான். மாலையின் மதிப்பு தெரியவில்லை உங்களுக்கு. காலம் பதில் சொல்லும். அடுத்த தேர்தலில் வாக்கு சீட்டுகள் மூலமாக அரசு ஊழியர்களை பகைத்து எந்த அரசும் அடுத்து அரியனணயில் ஏறியதில்லை என்பது தங்களுக்ககு தெரிந்திருக்குமா என்று தெரியவில்லை. இதே கேள்வியை புரட்சி தலைவர் முதல்வர் ஆனதும் எழுப்பினார். அவர் ரிக்க்ஷா தொழிலாளிக்கும் கூலி தொழிலாளிக்கும் கிராக்கிப்படி வழங்காத நிலையில் நிரந்தர சம்பளம் பெறும் அரசு ஊழியர்களுக்கு ஏன் வழங்க வேண்டும் என கேட்டு DA கோப்பினை திருப்பிஅனுப்பினார். தலைமை செயலக ஊழியர்கள் பெரிய போராட்டம் நடத்தப்போவதாக அப்போதைய நிதி அமைச்சர் திரு.நாஞ்சில் மனோகரிடம் தெரிவித்தபோது அவர், தானே உரிய நேரத்துல தலைவரிடம் பேசி ஆணை பெற்று தருவதாக உறுதியளித்தார். சில தினங்களில் வேறு ஒரு கோப்பு தொடர்பாக முதல்வரை சந்திக்க ராமாவரம் தோட்டம் சென்றபோது இந்த கிராக்கிப்படி பற்றி விபரமாக தெரிவித்தார்....நாம் தரும் இந்த கிராக்கி படியில் இருந்து ரிக்க்ஷா தொழிலாளி கேட்கும் கூலி உயர்வை இதே அரசு ஊழியர்கள் தருவதால் மறைமுகமாக ரிக்க்ஷா தொழிலாளர். கூலி தொளிலாளர் கூலி உயர்வு பெறுவதோடு சமுதாயத்தில் அனைவருக்கும் இதன் பலன் போய் சேரும் என்ற Micro economic theory ஐ முதல்வர் எம்.ஜி.ஆரிடம் சொன்னதும் அவர் புரிந்து கொண்டு உடனே கிராக்கிப்படி உயர்வுக்கு ஆணையிட்டார் அந்த கோப்பில் இனி வருங்காலத்தில் மத்திய அரசு வழங்கும் கிராக்கிப்படி த.நா.அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என ஆணையிட்டதன் அடிப்படையில் இதுவரை தடையின்றி த.நா.அரசு ஊழியர்கள் பெற்று வந்தனர். ஆனால் காணொளியில் காணும் கேட்கும் விளக்கங்கள் சமூகத்தில் ஓர் அங்கமாக உள்ள அரசு ஊழியர்களின் சமபொருளாதார நிலைக்கு மாறாக உள்ளது. அரசு ஊழியர்களுக்கு கிராக்கி படி கொடுத்தால் சமுதாயத்தில் அனைவருக்கும் நிதி பகிர்வு சென்றடையும் என்பதுதான் நிதர்சனமான நிலை.

மக்கள்நல அரசு என்பது லாபநட்டம் பார்க்கும் கம்பெனி அல்ல. பெருமுதலாளிகள், கார்ப்பரேட்டுகள், அம்பானிகள், அதானிகளுக்கெல்லாம் அரசு கஜானாவில் இருக்கும் நிதிகளை சலுகைகள் என்ற பெயரில் பல நூறு கோடிகள் வாரி வழங்கிவிட்டு ஏழைகளை பசியும் பஞ்சமும் பட்டினியுமாக விட்டுவிடுவதுதான் ஒரு மக்கள் நல அரசு இழைக்கும் சமூக அநீதியாக இருக்குமே தவிர அரசியலமைப்பு வழங்கியுள்ள உரிமைகளைக் கேட்டு போராடும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகள் ஒருபோதும் சமூக அநீதியாகாது மெத்தப்படித்த மேன்மை தங்கிய நிதியமைச்சர் அவர்களே!.*வலையில் பிடித்தது.* ●

## கேரள அமைச்சர்கள் என்றாலே ஆச்சர்யம்தான்!

கேரள முதல்வருக்கு சொந்தக் கார் இல்லை; நிதியமைச்சருக்கு காணி நிலம் கிடையாது. கேரள அமைச்சர்களின் சொத்துப்பட்டியல் வெளியிடப்பட்டது. முதலமைச்சர் பினராயி விஜயனுக்குச் சொந்தக் கார் இல்லை. நிதிய மைச்சர் தாமஸ் ஐசக்கிடம் காணி நிலம் கூட கிடையாது. கேரள அமைச்சர்களில் கோடீஸ்வரர் என்று எடுத்துக்கொண்டால் பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஏ.கே.பாலன் மட்டுந்தான். இவரின் பெயரில் வங்கியில் ரூ. 2.35 கோடி டெபாசிட் உள்ளது. இந்த பாலனும் கோடீஸ்வரர் ஆன கதை சுவாரஸ்யமானது. பாலனின் மனைவி ஜமீலா அரசு மருத்துவர்.அந்த வகையில் மாதம் ரூ.90 ஆயிரம் சம்பளம் வாங்கியிருக்கிறார்.தற்போது ஜமீலா ஓய்வும் பெற்றுவிட்டார். மனைவிக்கு கிடைத்த பி.எப். உள்ளிட்ட ஓய்வூதியபலன்கள் ஏகே.பாலனை கோடீஸ்வரர் ஆக்கியுள்ளது. ஜமீலாவுக்கு மாதம் ரூ.52,000 பென்சனும் கிடைத்து வருகி றது. இப்படித்தான் 66 வயது ஏ.கே.பாலன் கோடீஸ்வரராக மாறியுள்ளார்.

முதலமைச்சர் பினராயி விஜயனின் மாத வருமானம் ரூ.79,364. இவர் ரூ. 2.20 லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் வைத்துள்ளார். ரூ.22.77 லட்சத்துக்கு முதலீடு செய்துள்ளார். 95.5 சென்ட் நிலம் உள்ளது. முதல்வரின் மொத்த சொத்து மதிப்பு ரூ.50 லட்சத்துக்குள் தான் உள்ளது.

நிதியிலேயே புரளும் நிதியமைச்சர் தாமஸ் ஐசக்கின் நிலையோ இன்னும் பரிதாபம். இவருக்குச் சொந்தமாக ஒரு சென்ட் நிலம் கூட இல்லை. குண்டுமணியளவு தங்கமும் இல்லை. மாதம் ரூ.55,012 வருமானம் வருகிறது. ரூ.1.40 லட்சத்துக்கு முதலீடு செய்துள்ளார். தாமஸிடம் சொந்தக் காரும் இல்லை. கேரளாவில் இன்னொரு அமைச்சர் தன் மாத வருமானம் ரூ1,000 என்று காட்டியிருக்கிறார். இவரின் பெயர் காடம்பள்ளி ராமச்சந்திரன். கேரள தேசவம் போர்டு அமைச்சர். இவர் சொந்தப் பணிக்கு ஆட்டோவில் தன் பணத் தில் செல்லும் ரகம். தெருவோரக் கடைகளில் சாப்பிடுவார். கட்சி அலுவலகங்களில் தங்கி கொள்வார். காடம்பள்ளி ராமச்சந்திரன் ரூ.99,000 மதிப்புக்குத் தங்க நகை வைத்து உள்ளார். ரூ.63,000 வரை முதலீடு செய்து உள்ளார். 83 சென்ட் நிலம் சொந்தமாக உள்ளது. அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சம்பளத் தைத்தவிர இதர வருமானம் இது. கேரள அமைச்சர்களின் சொத்துப் பட்டியலை வெளிப்படையாக கேரள அரசு இணையத்த ளத்தில் வெளியிட்டுள்ளது. கேரளாவே ஆச்சர்யம் தான்... கேரள அமைச்சர்கள் இன்னும் ஆச்சர்யம்!!

●

கவிதை

# டிசம்பர் இருபத்தைந்து

**- ஆர்.நடராஜன்**

சூரியன் உதிக்குமுன் வருதலும்-மாலை
சூரியன் மறைந்தபின் போதலும்
அடித்தட்டு வர்க்கம் உழைக்க-ஆண்டைகள்
மேல்தட்டு வர்க்கமாய்க் கொழுத்தனர்

உழைக்கும் மாந்தரை ஒடுக்க-ஆண்டைகள்
இழைத்த அநீதிக்கு அளவிலை
சாணிப்பால் சவுக்கடி கொடுத்து-உழைப்போர்
கூனித்தான் குறுகித்தான் கிடந்தனர்

இருளுக்கு ஒளியாய் உதித்தது-சங்கம்
கருவியாய் சுரண்டலை எதிர்த்தது
சாணிப்பால் சவுக்கடிக்கு முடிவு-செங்கொடி
சங்கம் கண்டது வடிவு

மனிதனை மனிதனாய் நடத்த-உரிமை
புனிதமாய்ப் போரும் தொடர
கணிதமாய் ஆண்டைகள் சங்கம்-துவக்கி
இனியதில் சேர்ந்திடக் கோரினர்

தன்மானம் தந்தது செங்கொடி-சங்கம்
நன்மதிப்பு பெற்றதைத் துறந்து
ஆண்டைகள் அமைத்த அமைப்பில்-இனி
அணிவகுக்க மாட்டோம் என்றனர்

உழைக்கும் மாந்தரின் முடிவு-ஆண்டைகள்
இழைத்தனர் சதித்திட்ட வடிவு
பிழைக்கும் சாமானியரை எரித்து-வஞ்சம்
தழைக்க வெண்மணி தேர்வு

பெண்கள் குழந்தைகள் முதியோர்-என
நாற்பத்து நால்வரை எரித்து
நள்ளிரவில் கொடுமை அரங்கேற்றம்-வெண்மணி
உள்ளளவும் வரலாறு கூறும்

செங்கொடி காத்திட்ட தியாகம்-வெண்மணி
தங்கக் கண்மணிகளின் இயக்கம்
எங்கும் பரப்பும் முழக்கம்-சங்கம்
நோக்கும் திசையெட்டும் பரவும்

●

கட்டுரை

# மனம் கவர்ந்த
# தி கிரேட் டிக்டேட்டர்

**– பெரணமல்லூர் சேகரன்**

சாப்ளின் ஐந்து வயதிலேயே நடிக்கத் தொடங்கி விட்டார். முதன் முதலில் 1894ஆம் ஆண்டில் மியூசிக் ஹாலில் தனது தாய்க்குப் பதிலாக ஒரு வேடத்தில் நடித்தார். சிறுவனாக பல நாட்கள் உடல் நலக் குறைவால் படுத்த படுக்கையாக இருந்தபொழுது, இரவுகளில் அவரது தாய் சன்னல் ஓரம் அமர்ந்து வெளியில் நடக்கும் நிகழ்வுகளை நடித்துக் காட்டுவார். சாப்ளினுக்கு பத்து வயதாக இருந்த பொழுது சிட்னி இலண்டன் ஹிப்போட்ரோமில் சின்ட்ரெல்லா பாண்டோமைமில் ஒரு பூனையாக, நகைச்சுவையான பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பை வாங்கித் தந்தார். 1903ஆம் ஆண்டில் "ஜிம், எ ரொமான்ஸ் ஆஃப் காக்கைய்ன்" நாடகத்தில் நடித்தார். இதற்குப் பிறகு அவரது முதல் நிரந்தர வேலை கிடைத்தது - செர்லாக் ஹோம்ஸ் நாடகத்தில் செய்தித்தாள் விற்கும் சிறுவன் பில்லி வேடம். இதனைத் தொடர்ந்து கேசீஸ் கோர்ட் சர்க்கஸ் நடத்திய பல்சுவை நிகழ்ச்சியிலும், Fred Karno's Fun Factory slapstick நகைச்சுவை நிறுவனத்தில் கோமாளி வேடத்திலும் நடித்தார். அமெரிக்காவின் குடிபெயர்வுப் பதிவுகளின்படி கார்னோ குழுவுடன் அக்டோபர் 2, 1912 - அன்று அமெரிக்கா வந்தடைந்தார். கார்னோ குழுவிலே ஆர்த்தர் ஸ்டான்லே ஜெப்பர்சனும் இருந்தார் - இவரே பின்னர் ஸ்டான் லாரலாக பிரபலமானார். இருவரும் சிறிது காலம் ஒரே அறையில் தங்கினர்.

**"தி கிட்" திரைப்படத்தில் ஜாக்கி கூகனுடன் சாப்ளின் (1921)**

தயாரிப்பாளர் மாக் செனட் சாப்ளினின் திறமையைக் கவனித்து அவரது நிறுவனமான கீஸ்டோன் திரைப்பட நிறுவனத்தில் சேர்த்துக் கொண்டார். முதலில் சாப்ளினுக்கு கீஸ்டோன் நடிப்பு முறைக்கு தன்னை மாற்றிக் கொள்வது சற்று கடினமாக இருந்தது. ஆனால் மிக விரைவில் தன்னைப் பழக்கிக் கொண்டு கீஸ்டோனின் சிறந்த கலைஞராக வளர்ந்தார். இவரது கிடுகிடு வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது அவர் தனக்கென்று உருவாக்கிக் கொண்ட நாடோடி வேடமும், நிறுவனத்தில் இவருக்கு இயக்கவும் புது படைப்புகள் படைக்கவும் கொடுக்கப்பட்ட உரிமையுமாகும்.

1927ஆம் ஆண்டில் ஓசையுடன் கூடிய திரைப்படங்கள் வெளிவரத் துவங்கி மிகவும் பரவலானாலும் 1930ஆம் ஆண்டு வரை சாப்ளின் பேசும் படங்களில் இருந்து ஒதுங்கியே இருந்தார். சாப்ளின் சினிமாவின் பல துறைகளில் கை தேர்ந்தவராகத் திகழ்ந்தார். 1952ஆம் ஆண்டில் வெளிவந்த லைம்லைட் திரைப்படத்தில் நடன அமைப்பையும் 1928ஆம்



ஆண்டுத் திரைப்படம் "தி சர்க்கஸ்" படத்தின் தலைப்பு இசை அமைப்பையும் இவரே செய்தார். இவர் இசையமைத்த பாடல்களில் பெரும் புகழ் பெற்றது ஸ்மைல்.

இவரது முதல் டாக்கீஸ் 1940 ஆம் ஆண்டில் வெளியான "தி கிரேட் டிக்டேடர்" (The Great Dictator). இது அடால்ஃப் ஹிட்லரையும் அவரது பாசிச கொள்கையையும் எதிர்த்து குரல் கொடுத்த படம். இப்படம் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் புகுவதற்கு ஒரு வருடம் முன்பு அங்கு வெளியிடப்பட்டது. இதில் சாப்ளின் இரு வேடங்கள் பூண்டிருந்தார் - ஹிட்லர் மற்றும் நாசியர்களால் கொடுமையாக கொல்லப்படும் யூத இனத்தைச் சேர்ந்த ஒரு நாவிதன். சினிமா மீது மோகம் கொண்ட ஹிட்லர் இப்படத்தை இரு முறை பார்த்தார். போர் முடிந்த பிறகு, ஹோலோகாஸ்ட்டின் கொடுமை உலகிற்கு தெரியவந்த பிறகு சாப்ளின் இக்கொடுமைகள் எல்லாம் தெரிந்திருந்தால் ஹிட்லரையும், நாசியர்களையும் கிண்டல் செய்திருக்க முடியாது என்றார்.



"ஏன் சார் இவரை அறைஞ்சீங்க?"

"ஏம்பா ரெண்டு நாள் ஆபீஸுக்கு வரல, தகவலும் கொடுக்கலேன்னு கேட்டா, 'உடம்பு சரியில்லே, மதுரை எய்ம்ஸ்ல அட்மிட் ஆயிருந்தேன்'னு சொல்றான் தோழர்."

சாப்ளினின் அரசியல் சிந்தனைகள் இடது சார்புடையதாகக் கருதப்படுகிறது. இதனையே இவரது திரைப்படங்களில், முக்கியமாக "மாடர்ன் டைம்ஸ்" பிரதிபலித்தன. இப்படம் பாட்டாளிகள் மற்றும் ஏழைகளின் கவலைக்கிடமான நிலைமையைச் சித்தரித்தது. "மெக்கார்த்திச காலங்களில்" இவர் அமெரிக்க கொள்கைகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், கம்யூனிஸ்ட்-எனவும் சந்தேகிக்கப்பட்டார்; ஜே.எட்கார் ஹூவர் எஃப்.பி.ஐ-யிடம் இவரை கண்காணிக்குமாறு உத்தரவிட்டு, அமெரிக்காவில் சாப்ளின் வாழும் உரிமையை நீக்க முயற்சித்தார். சாப்ளினின் வெற்றிகள் அனைத்துமே அமெரிக்காவில் அமைந்தாலும், அவர் பிரிட்டிஷ் குடியுரிமையினையே நீட்டித்தார். 1952 ஆம் ஆண்டில் சாப்ளின் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இதனைத் தெரிந்துகொண்ட ஹூவர் ஐ.என்.எஸ் Immigration and Naturalization Service-உடன் பேச்சுவார்த்தை நடத்தி, சாப்ளின் அமெரிக்கா திரும்பும் அனுமதிச் சீட்டை ரத்து செய்தார். ஆதலால் அவர் ஐரோப்பாவிலேயே தங்கும்படி நேர்ந்தது. இவர் 1972 ஆம் ஆண்டில் சிறிது காலம், தனக்கு அளிக்கப்பட்ட கௌரவ ஆஸ்கார் விருதைப் பெறுவதற்காக அமெரிக்கா திரும்பினார்.

கேலிச்சித்திரம் ஒன்றில் சார்லி சாப்ளினின் கண்கள் நீல நிறத்தில் இருந்தன. கருப்பு வெள்ளைப் படங்களில் மட்டுமே அவரைப் பார்த்திருந்த ரசிகர்கள், அவரை நேரில் பார்க்கும்பொழுது பெரிதும் வியப்புற்றனர்.

சாப்ளின் நல்ல சதுரங்க ஆட்டக்காரர். இதனை பிரபல ஆட்டக்காரர் சாமி ரிஷெவெஸ்கியிடம் பயின்றார்.

சாப்ளினின் புகழினால் சாப்ளினைப் போல் தோற்றம் அளிப்போருக்கான போட்டிகள் பலவற்றை நடத்தினார்கள். ஒரு முறை அப்போட்டி ஒன்றில் சாப்ளின் இரகசியமாகப் பங்கு பெற்றார். இதில் இவரால் மூன்றாம் பரிசையே வெல்ல முடிந்தது!

*டிசம்பர் 4 சார்லி சாப்லின் நினைவு நாள்* ●

குறுங்கதை

# ஊழியர் நடத்தை விதிகள், 2027

**- குணா**



நம்ம ஆளு ஒருத்தனை அவன் வேலை செஞ்சுகிட்டிருந்த அலுவலகத்துல இருந்து வேலையை விட்டு மூணு மாசத்துலயே அனுப்பிட்டாங்க. அவனுக்கு ஒன்னும் புரியல, நாம சரியாத்தானே வேலை பார்த்தோம் நம்மளை எப்படி நீக்கினாங்கன்னு யோசிச்சு யோசிச்சு கடைசியில ஒரு முடிவுக்கு வந்தான்.

அடுத்த வாரத்துல இன்னொரு அலுவலகத்துல வேலைக்கு சேர்ந்தான். எல்லாரும் ஆறு மணிக்கு ஆபிஸை விட்டு கிளம்பினாலும் இவன் நைட் எட்டு மணி வரைக்கும் வேலை பார்த்தான். தன்னுடைய வேலைகள்ல எந்த குறையும் இல்லாம பர்பெக்டா வேலை செஞ்சான். மூணாவது மாசம் சம்பள நாள் வந்தது. தலைமை அதிகாரி அவனை தன்னுடைய கேபினுக்கு கூப்பிட்டு அனுப்பினாரு. தலைமை அதிகாரி தன்னை பாராட்டப் போறாரு என்ற மிதப்போடு போனான். தலைமை அதிகாரி அவனுக்கு அந்தமாத சம்பளத்தை கொடுத்துட்டு கூடவே டிஸ்மிஸ் லெட்டரையும் அவன் கையில் கொடுத்தாரு. அதை பார்த்ததும் நம்மாளுக்கு தலை கிறுகிறுத்து போச்சு. அவர் சொன்னாரு, ''எல்லாரும் ஆறு மணிக்கு முடிக்கிற வேலையை நீ எட்டு மணி வரைக்கும் செய்யறே. அதனால நீ இந்த வேலைக்கு லாயக்கில்லை. உன் ஒருத்தனுக்காக தினமும் ரெண்டு மணி நேரம் சிஸ்டம், கரண்ட், ஏசின்னு அலுவலகத்துக்கு கூடுதலா செலவாகுது. கரண்ட் பில்லும் எகிறுது.''

இப்ப அவனுக்கு அவன் தவறு புரிஞ்சுது. ''இனிமே இந்த தவறு நடக்காமல் பார்த்துகணும்'' என்ற வைராக்கியத்தோடு நடையைக் கட்டினான். அடுத்த வாரத்தில் பக்கத்திலிருந்த இன்னொரு அலுவலகத்துல நம்ம ஆளு வேலைக்கு சேர்ந்தான். இந்த நிறுவனத்துல தனக்கு கொடுத்த நேரத்துல தனக்கு கொடுத்த வேலைகளை எல்லாம் மூச்சை பிடிச்சுக்கிட்டு செஞ்சுட்டு ஆறு மணிக்கெல்லாம் ஆபீஸை விட்டு வெளியே வந்துட்டான். ஆனா பாருங்க அந்த

நிறுவனத்துலயும் அவனால மூணு மாசத்துக்கு மேல குப்பை கொட்ட முடியல.

என்ன காரணம்னு தெரிஞ்சுக்க' தலைமை அதிகாரியைத் தேடிக்கிட்டு அவர் கேபினுக்கு போனான். அவர் இன்னிக்கி சீக்கிரமே வீட்டுக்கு கிளம்பிட்டாருன்னு செகரெட்டரி சொல்ல அவருடைய அட்ரஸை வாங்கிகிட்டு அவர் இருக்கும் இடத்தை தேடிக்கிட்டு போனான். தலைமை அதிகாரி தான் தங்கியிருந்த அறையில் அவருடைய துணிகளை அவசர அவசரமாக சூட்கேஸில் அடுக்கிக் கொண்டிருந்தார். அவரிடம் கோபமாக சென்று ''என்ன சார் இது அநியாயம். இதுக்கு மேல எப்படி சார் வேலை செய்யறது?'' என்றவாறு டிஸ்மிஸ் லெட்டரைக் காட்டினான்.

அந்த லெட்டரை பார்த்துட்டு தன் சூட்கேஸின் அடியில் இருந்து ஒரு புத்தகத்தை அவனிடம் எடுத்துக் ககொடுஎடுத்தாரு அவரு. "தம்பி... இந்த புஸ்தகத்தை படி. புரியும். எனுக்கு 7.20க்கு கொல்கொத்தா டிரெயின். இந்த டிரெயினை பிடிச்சாதான் நாளைக்கு நான் புது ஆபீஸ்ல சேர முடியும்.'' என்றவர் கிளம்பிட்டாரு. அவர் கொடுத்த புத்தகத்தை பார்த்தான் ''ஊழியர் நடத்தை விதிகள், 2027'' என்று தலைப்பிட்டு இருந்தது. உள்ளே பிரித்ததும் விதி எண்.1ல் இப்படி எழுதியிருந்தது, ''எவ்வளவு பெரிய திறமைசாலியாக அல்லது புத்திசாலியாக அல்லது கடினவேலை செய்பவராக அல்லது நேர்மையாளராக அல்லது வேறு எப்படி இருந்தாலும் அந்த நபரை மூன்று மாதங்களுக்கு மிகாமல் பணியில் அமர்த்தக்கூடாது.''

(எச்சரிக்கை: அரசாங்களும், அதிகார வர்க்கமும் தனியார் மயம் மற்றும் கார்ப்பரேட்மயத்துடன் கொண்டுள்ள மோகம் செல்லும் வேகத்தை பார்த்தால், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினரும் ஒன்று சேர்ந்து உரிமைக்களுக்காக போராடாவிட்டால் இந்த நிலை 2027ல் எல்லோருக்கும் எழலாம்.)

●




**வாடிக்கையாளர் :**

"சார் உங்க பேங்க்ல இருந்து லோன் தர்றதா எனக்கு போன் பண்ணியிருந்தாங்க."

**வங்கி மேலாளர் :**

"வாங்க வாங்க. உங்களுக்கு எந்தவிதமான லோன் வேணும்?"

**வாடிக்கையாளர் :**

"ஏதோ 'வாராக்கடன்'னு கோடிக்கணக்குல இருக்காமே. அந்தமாதிரி லோன் தாங்க."

**வங்கி மேலாளர் :**

"......?.......?......?.....?......."

# மீண்டும் முடியாட்சிக்கு செல்லப்போகிறோமா?

**- நீதிபதி எச்.என்.நாகமோகன்தாஸ்**

**தமிழில்: அ.விஜயகுமார்**

*‘இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை பாதுகாப்போம்’ எனும் தலைப்பில் சென்னையில் அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் நடத்திய கருத்தரங்கில் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) எச்.என்.நாகமோகன்தாஸ் பேசியது:*

இந்திய அரசியல் சாசனம் எப்படி வடிவமைக்கப்பட்டது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் அதை எப்படி பாதுகாப்பது என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியும். கர்நாடகாவில் மாவட்ட மற்றும் தாலுகா அளவி லான நீதிமன்றங்களில் விசாரணை கைதிகளை ஜாமீனில் எடுக்கும் வழக்கறிஞர்களுக்கு அரசியல் சாசனத்தை படித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று எந்த கவலையும் இல்லை. அது உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதி மன்றங்களில் உள்ள வழக்கறி ஞர்களின் வேலை என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து சட்டங்களுக்கும் தாயாக அரசியல் சாசனம் விளங்குகிறது. தாயை நாம் தெரிந்து கொண்டால் மற்றவர்களையும் நாம் எளிதாக தெரிந்து கொள்ள முடியும். வழக்கறிஞர்களுக்கு முதல் வேலையே அரசியல் சாசனம் என்றால் என்ன? அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை படித்து தெரிந்து கொள்வதுதான்.

அரசியல் அதிகாரம் என்றால் சட்டத்தை இயற்றும் அதிகாரம் அதற்கு உண்டு. அந்த சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரம் அதற்கு இருக்கிறது. அந்த சட்டத்தை யாராவது மீறினால் தண்டனை அளிக்கும் அதிகாரமும் உண்டு. இந்த மூன்று அதிகாரங்களும் யாரிடம் இருக்கிறதோ அவர்களே அரசியல் அதிகாரம் கொண்டவர்கள். ஒரு காலத்தில் இந்த அதிகாரங்கள் சாம்ராஜ்யங்களிடமும் சக்கர வர்த்திகளிடமும் மகாராஜாக்களிட மும் இருந்தது. அவர்கள் சட்டங் களை இயற்றி அதை அமல்படுத்தி அதை மீறுவோரை தண்டிக்கும் அதி காரத்தை பெற்றிருந்தனர். ஒரு கட்டத்தில் நாம் சாம் ராஜ்யங்கள், சக்கரவர்த்திகள், மகாராஜாக்களின் அதிகாரத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம். அவர்கள் இருந்த இடத்தில் அரசி யல் ஜனநாயக ஆட்சி முறை அமைந்தது. ஜனநாயக ஆட்சி முறை யில் சட்டங்களை இயற்றும் அதி காரம் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட சட்டமன்றம் மற்றும் நாடாளு மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் சட்டங்களை அமல் படுத்தும் அதிகாரம் நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதை அமலாக்கும்போது மீறுவோரை தண்டிக்கும் அதிகாரம் நீதி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள் ளது. எனவேதான் சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை இவை மூன்றும் சுதந்திரமாக தனித்த அதிகாரங் களுடன் செயல்படுபவை.

உலகில் உள்ள 195 நாடுகளில் 190 நாடுகளுக்கு, அவர்களுக் கென்று சொந்தமாக அரசியல் ஜன நாயக முறை உள்ளது. சட்ட மன்றம், நிர்வாகம், நீதி மன்றம் இவை அனைத்தும் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதாக அனுபவம் வாயி லாக பொதுமக்கள் உணர்ந்துள் ளனர். சட்டமன்றம் எப்படி எதேச்சதி காரமாக நடந்து கொள்கிறது என்பதற்கு உதாரணத்திற்கு, கடவுளுக்கு நாள்தோறும் கற்பூரம் காட்டும்போது கடிகார முள் சுற்றும் திசையில் சுற்றி காட்டுவோம். இதுதான் வழக்கம். ஆனால், சட்ட மன்றத்தில் இனி கடவுளுக்கு கற்பூரத்தை கடிகார முள் சுற்றும் திசைக்கு நேர் எதிராக காட்ட வேண்டும் என்று ஒரு அரசு சட்டம் இயற்றினால் அது அதிகார அத்துமீறல் என்றுதான் கருத முடி யும். சட்டமன்றம் ஒரு சட்டத்தை இயற்றத்தான் முடியும். நிர்வாகம் தான் அதை செயல்படுத்த வேண்டும். அந்த நிர்வாகம் ஒரு சட்டத்தை ஒரு மாவட்டத்தில் முழுமையாகவும் மற்றொரு மாவட்டத்தில் 50 விழுக்காடும், இன்னொரு மாவட்டத் தில் அமல்படுத்தாமல் இருப்பதும் நிர்வாக எதேச்சதிகாரம் என்கிறோம். நீதிமன்றங்களிலும்

இந்த அதிகார அத்துமீறல் இருந்தது. கணவர் தனது மனைவியை கொன்று விட்டால் விசாரணையில் அந்த நபர் குற்றவாளி என்று உறுதிப்படு த்தப்பட்டால் அவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை அளித்தால் நாம் அனைவரும் அதை ஏற்றுக் கொள்வோம். ஆனால், ஒரு ஏழை மனிதன், தனது வயிற்றுப் பிழைப்பு க்காக ஒரு சிறிய நகையை திருடி விட்டால் அவருக்கு மரண தண் டனை வழங்குவீர்களா? அப்படியே நீதிமன்றம் வழங்கினால் அதை நாம் ஏற்றுக் கொள்வோமா? இல்லை. அப்படி ஒருவேளை மரண தண்டனை வழங்கப்பட்டால் அது நீதித் துறை எதேச்சதிகாரம்.

இதுபோன்ற அதிகார அத்து மீறல்கள் அதிகரித்து வருவதை தெரிந்து கொண்ட மக்கள் இதற்கு கடி வாளம் போட வேண்டும், கட்டுப் படுத்த வேண்டும். இதை முறைப் படுத்த வேண்டும் என்று நினைத்தார் கள். அதன் பின்னர்தான் ஒவ்வொன் றுக்கும் ஒரு விதிமுறைகள் உருவாக் கப்பட்டன. சட்ட மன்றம் எப்படி செயல்பட வேண்டும், நிர்வாகம் எப்படி செயல்பட வேண்டும், நீதி மன்றம் எப்படி செயல்பட வேண்டும் என விதிமுறைகள் உருவாக்கப்பட் டன. இப்படித்தான் சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறைக்கு விதிமுறைகள் கொண்டு



"ஆயிரம் ரூபாய் கொடுத்து சில்லறை கேட்டால் 820 ரூபாய் தான் தர்றீங்க."

"இப்ப சில்லறை மாத்த 18 சதவீதம் ஜி.எஸ்.டி. தெரியாதா?

– ரஉறீம் கஸ்ஸாலி

வரப்பட்டன. இதன் மூலம் நாம் நமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும். நமக்கான பொறுப்பு களை உணர்ந்து கொள்ளமுடியும். மாநிலங்கள் என்றால் என்ன? அதற்கும் ஒன்றிய அரசுக்கும் உள்ள உறவுகள் என்ன? என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. நாட்டின் வருங் காலம் எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானிக்க முடிந்தது? நமது நாடு எப்படி இருக்க வேண்டும். ஜனநாயக முறைப்படியா? அல்லது சர்வாதிகார ஆட்சி முறைப்படியா? மதச்சார்பற்ற அரசா அல்லது மத சார்புடன் செயல்படும் அரசாங்கமா? என்பதை நாம் முடிவு செய்து கொள்ள முடிந்தது. இதன் அடிப்படையில் விதி முறைகள் வந்தன. உரிமைகள் வந்தன. பொறுப்புகள் வந்தன. ஒன்றிய - மாநில அரசு உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு அமைப்பிற்குமான அதிகார எல்லைகள் வரையறுக்கப்பட்டன. அடிப்படை உரிமைகள் வரையறுக் கப்பட்டன. இவை அனைத்தும் சேர்ந்ததுதான் அரசியல் சாசனம். இப்படித்தான் உலகம் முழுவதும் அரசியல் சாசனங்கள் உருவாக் கப்பட்டன. உலகில் பெரும்பாலான நாடுகளில் தங்களுக்கு என்று சொந்தமாக அரசியல் சாசனத்தை ஏற்படுத்தியுள்ளன.

நமது நாட்டில் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்தாலும், பாஜக, அல்லது காங்கிரஸ் வந்தாலும் திமுக வந்தாலும் அரசியல் சாசனத்தின்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றுதான் மக்கள் விரும்புகிறார்கள். இது நமது நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள மக்கள் இதைத்தான் விரும்புகிறார்கள். இந்த பின்னணியில் இந்தியாவில் அரசி யல் சாசனம் எப்படி உருவாக்கப் பட்டது. அப்போதைய சூழல்கள் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நமது நாட்டிற்கு 1947ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது. 1950ல் உலகி லேயே மிகப்பெரிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டது. இதன்பின்னர் இந்தியா ஒரு குடியரசு நாடு என உலகம் ஏற்றுக் கொண்டது. இந்தியா வில் 1950 ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சாசனம் அமலுக்கு வந்து 72ஆண்டுகள் ஆகிவிட்டது. நாம் தற்போது 73வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளோம். அரசியல் சாசனத்தை பற்றி பொதுமக்களிடையே விளக்குவதில் அரசு தோல்வியடைந்து விட்டது. குடிமக்கள் என்ற முறையில் நாமும் அரசியல் சாசனத்தை படித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் நமக்கும் இல்லை. இந்த பின்னடைவுக்கு இடையே நாம் 72 ஆண்டுகளை கடந்து விட்டோம். 20 ஆண்டுகளுக்கு முன்பு தேசிய சட்ட சேவைகள் ஆணையமும்,

அரசாங்கமும், அரசியல் சாசனத்தை ஒரு பாடமாக கல்லூரிகளில் கற்பிக்க முடிவு செய்தன. அதிலும் போதிய திருப்தி ஏற்படவில்லை. ஏனென்றால் இயற்பியல் பாடம் நடத்தக்கூடிய ஆசிரியர் அரசியல் சாசனத்தை போதிக்கிறார். உடற்கல்வி ஆசிரியர் அரசியல் சாசனத்தை போதிக்கிறார். கர்நாடகாவில் பல பல்கலைக்கழகம் மற்றும், கல்லூரி களில் இதுதான் நிலை.

மாணவர்களும் அரசியல் சாச னத்தை படித்து அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அல்லாமல் தேர்வில் மதிப்பெண் பெற வேண்டும் என்பதற்காக மட்டும் படிக்கிறார்கள். இவை அனைத்தும் அரசியல் சாசனத்தின் முக்கியத் துவத்தை குறைத்து விட்டன. இது தான் நாடு முழுவதும் உள்ள நிலை. இந்த பின்னணியில் நாம் அரசியல் சாசனத்தை படித்து அறிந்து கொள் வது மிகமிக அவசியம். இதில் பொதுமக்களைவிட வழக்கறி ஞர்களுக்கு கூடுதல் அக்கறை உள்ளது. அப்போதுதான் அரசியல் சாசனத்தை ஏன் பாதுகாக்க வேண்டும் என்று நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். நாம் அரசியல் சாசனத்தை இழந்துவிட்டால் நிலவுடமை சமூகத் திற்கு திரும்பிச் செல்ல வேண்டும். மன்னர்களின் ஆட்சி முறைக்கு செல்ல வேண்டும். எனவே ஜன நாயக முறைப்படியான சமூகத்தில் வாழ வேண்டும் என்று விரும்பும் அனைவரும் அரசியல் சாசனத்தை படித்து அறிந்து அதன் அவசி யத்தை தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அதை பாது காக்கவேண்டிய அவசியத்தை உணர முடியும்.

அரசியல் சாசனத்தை படிக்க வேண்டும் என்றால் தமிழ் மொழியில் படித்தாலும், ஆங்கிலத்தில் படித் தாலும் வேறு ஒரு மொழியில் படித்தா லும் அல்லது பத்து முறை திரும்ப திரும்ப படித்தாலும் அதை புரிந்து கொள்ள முடியாது. அப்படி என்றால் அதை எப்படி புரிந்து கொள்வது? இந்தியாவை புரிந்து கொண்டால் அரசியல் சாசனத்தையும் புரிந்து கொள்ள முடியும். ஒரு தெலுங்கு கவிஞர் “தேசம் என்றால் மண் மட்டுமல்ல மனமும்தான் மக்களும் தான்” என்றார். நமது நாடு நிலத்தால் மட்டும் அமைக்கப்படவில்லை. மக்களால் தான் தேசம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, மக்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எனது பள்ளி பருவத்தில் இந்தியா என்றால் வடக்கே இமயமலை, தெற்கே குமரி முனை, கிழக்கில் வங்கக்கடல், மேற்கில் அரபிக்கடல் என்று ஆசிரியர் சொல்லிக் கொடுத்தார். இதற்கு இடைப்பட்ட பகுதிகளில் கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகள் விந்திய மலைகள் உள்ளன. இது தான் இந்தியா என்று எனக்கு சொல்லிக் கொடுத்தது போன்றுதான் உங்களுக்கும் ஆசிரியர் சொல்லிக் கொடுத்திருப்பார். ஆனால் அது அல்ல இந்தியா. இந்தியா என்றால் நாம் அனைவரும்தான். நமது நாட்டில் உள்ள மக்களை நாம் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். அந்த மக்களின் வரலாற்றை நாம் தெரிந்திருக்க வேண்டும். அவர்களின சமூக, அரசியல், கலாச்சார உறவுகளை நாம் அறிந்திருக்க வேண்டும். அவர்களின் மொழியை உப பிரிவுகளை அறிந்து கொண்டா ல்தான் இந்தியாவை பற்றி அறிந்து கொள்ள முடியும்.

இந்திய வரலாற்றை சமானிய மனி தனும் நாமும் எளிதாக அறிந்து கொள்ள அவற்றை

## “பஞ்ச்”

மொரப்பா



செவ்வாய் கிழமை என்றால்

கோவிலுக்கு போவேன்!

வெள்ளிக் கிழமை என்றால்

மசூதிக்கு போவேன்!

ஞாயிற்றுக் கிழமை என்றால்

தேவாலயத்திற்கு போவேன்!

நான் சாதி மதம் பார்ப்பதில்லை!

**இப்படிக்கு,**
**பிச்சைக்காரன்**

பண்டைய இந்திய வரலாறு, இடைக்கால இந்திய வர லாறு, நவீன இந்திய வரலாறு என மூன்றாக பிரித்துக் கொள்வோம். பண்டைய இந்திய வரலாற்றில் சிந்து சமவெளி நாகரீகத்தில் இருந்து 10 ஆம் நூற்றாண்டு வரை மௌரி யர்கள், குப்தர்கள், கனிஷ்கர்கள், ஹர்ஷவர்த்தனர்கள் ஆகியோர் இந்தியாவை ஆண்டனர். இடைக் கால இந்தியாவில் 10 வது நூற்றா ண்டில் இருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை ஆப்கானியர்கள், துருக்கி யர்கள், கில்ஜிக்கள், சுல்தான்கள், முகலாயர்கள் இந்தியாவை ஆண்டனர். 18ஆம் நூற்றாண்டு முதல் தற்போது வரை உள்ள காலம் நவீன கால கட்டத்தில் இந்தியாவில் சில பகுதிகளில் போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரகள், பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சி செய்தனர். பிரிட்டி ஷார் பெரும்பகுதியை ஆண்டனர். 1947ஆம் ஆண்டு பிரிட்டி ஷாரிடமிருந்து இந்தியா விடுதலை பெற்றது. 1950ல் குடியரசு நாடாக அறி விக்கப்பட்டது. இந்தியாவை ஆண்ட இந்த ஆட்சி யாளர்கள் பற்றி நாம் தெரிந்து கொள்ளாவிட்டால் நமது அரசியல் சாசனத்தை புரிந்து கொள்ள முடி யாது. முடியாட்சியை பற்றி அறிந்து கொள்ளாமல் ஜனநாயகத்தை பற்றி எப்படி அறிந்து கொள்ள முடியும். நில வுடமை பற்றி அறிந்து கொள்ளாமல் காலனியாதிக்கத்தை பற்றி அறிந்து கொள்ள முடியாது. நமது வேர்கள் எது? நமது மூதாதையர்கள் யார்? நமது பெற்றோர் யார்? நமது தாத்தா பாட்டி யார் என்பதை நாம் அறிந்து கொள்ளாமல் இந்தியாவை அறிந்து கொள்ள முடியுமா?

எனது முதாதையர்கள் காஞ்சி புரத்தில் வசித்தார்கள். ஒரு காலத்தில் அங்கிருந்து அவர்கள் கர்நாடக மாநிலம் கோலாருக்கு புலம் பெயர்ந்து ள்ளனர். எனது தந்தையின் மூதாதை யர்கள் சிவ பக்தர்கள். கோலார் மாவட் டத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சிவ பக்தர்கள் விரதம் இருப்பார் கள். இங்கே இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. எனது தந்தை வெங்கடேச பெருமாளை வழி படும் குடும்பத்தை சேர்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்தார். வெங்கடேச பெருமாளை வழி படுவோர் சனிக்கிழமை விரதம் இருப்பார்கள். எனது குடும்பத்தில் திங்கட்கிழமையும், சனிக்கிழமையும் ஒன்று சேர்ந்துள்ளது. எனது தாத்தா பாட்டி இறந்துவிட்டதால் சிறுவயதில் எனது குடும்பத்தில் இருந்து ஒரே பெண் எனது அம்மாதான். எனது அம்மா சுயமரியாதை கொண்டவர். அவர் எங்களது குடும்பத்தை கட்டு ப்பாட்டில் வைத்திருந்தார். அவர் படிப்படியாக தனது திங்கட்கிழமை விரதத்தை சனிக்கிழமைக்கு மாற்றி னார். எனது குடும்பத்தில் உள்ள பெரி யப்பா சித்தப்பா, குழந்தைகள் அனை வரும் திங்கட்கிழமை விரதம் இருப் பார்கள். நான் மட்டும் சனிக்கி ழமை விரதம் இருப்பேன். நான் சித்தூர் மாவட்டத்தில் உள்ள மதனப் பள்ளியை சேர்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டேன். பின்னர் பெங்களூருவில் குடியேறி னோம். அங்குதான் நான் வழக்கறி ஞர் தொழில் செய்தேன். எனது மனைவி திங்கட்கிழமையும் விரதம் இருக்கவில்லை, சனிக்கிழமையும் விரதம் இருக்கவில்லை. வியாழக் கிழமை விரதம் இருந்தார். கேட்ட போது மைசூர் பக்கத்தில் ராகவேந்தி ராவை வழிபடுபவர்கள் அந்த நாளுக்கு விரதத்தை மாற்றிக் கொண்டார்கள். ஓராண்டு கழித்து என்னிடம் இந்த விரத நாள் குறித்து எனது மனைவி சண்டையிட்டார். வாக்குவாதம் செய்தார். வியாழக் கிழமை நான் விரதம் இருப்பேன். அன்று என்னால் சமைக்க முடியாது என்றார். அவர் எனது தாயார் விரதம் இருந்த தேதியில் விரதம் இருக்க வில்லை என்பதற்காக நான் அவரி டம் சண்டை போடவில்லை. நாங்கள் அதற்காக மோதிக் கொள்ள வில்லை. மாறாக அன்பு செலுத்தி னோம். அவரது உணர்வை மதித்து நடந்து கொண்டோம். எங்க ளுக்கு குழந்தைகளும் பேரக் குழந் தைகளும் பிறந்தன. விரதம் தொடர்கி றது. சகிப்புத் தன்மையும் தொடர்கி றது. எனது குடும்பத்தில் உள்ள இந்த சகிப்புத் தன்மை ஏன் எனது மாவட் டத்தில் இருக்க முடியாதா? ஏன் எனது மாநிலத்தில் இருக்க முடி யாதா? ஏன் எனது தேசத்தில் இருக்க முடியாதா? ஆனால் எங்கும் இன்று சகிப்பின்மையை காண முடிகிறது.

உங்களது ஆடையை நான் விரும்பவில்லை. உங்களது நிறம் எனக்கு பிடிக்கவில்லை, உங்களது சாதியை மதத்தை, உங்களது உணவை நான் விரும்பவில்லை. ஆனால் 'நீ எந்த மதத்தை தேர்வு செய்ய வேண்டும்'. எந்த கட வுளை வழிபட வேண்டும் என்ற உரி மையை அரசியல் சாசனம் நமக்கு வழங்கியிருக்கிறது. அதை பாது காக்கிறது. எனவே, இந்த நிகழ்வு களை அறிந்து கொள்ளாமல் அரசி யல் சாசனத்தை அறிந்து கொள்ள முடியாது. இரண்டாவதாக நமது நாட்டில் சாதிய முறை உள்ளது. எனது சாதி யின் அடிப்படையில்தான் வேலை யில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. எனது சாதியை நான் மாற்றிக் கொள்ள முடியாது. கலப்பு திரும ணத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கி றார்கள். ஏன் சடலத்தை கூட ஒரே இடத்தில் புதைக்க முடியவில்லை. இந்த மதத்திற்கு ஒரு சுடுகாடு, அந்த மதத்திற்கு ஒரு சுடுகாடு இருக்கி றது. இந்த சாதிக்கு இந்த சுடுகாடு, அந்த சாதிக்கு அந்த சுடுகாடு என பிரித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த சாதிய அமைப்பு முறை கல்வி ரீதியா கவும் சமூக ரீதியாகவும் பொருளா தார ரீதியாகவும் கலாச்சார ரீதி யாகவும் மனிதனை சமமாக பார்க்காமல் 'நீ வேறு நான் வேறு' என பிரித்து வைத்துள்ளது. இந்திய சமூக கட்டமைப்பில் உயர்சாதிக்காரர்கள் உயர் வேலை வாய்ப்புகளில் அமர்ந்துள்ளனர். அதிக எழுத்தறிவற்ற ஒடுக்கப்பட்ட சாதியை சேர்ந்தவர்கள் அடிமட்ட வேலைகளில் உள்ளனர். அதிக மாக வேலையில்லாதவர்கள், சுகா தார வசதி கிடைக்காதோர் என அதிக மாக இருப்பது ஒடுக்கப்பட்ட சாதி யில்தான். எனவே, இந்திய சூழலில் சாதி என்பது வர்க்கம். எனவே இதை நாம் அறிந்து கொள்ளாமல் அரசியல் சாசனத்தில் உள்ள சமூக நீதியை அறிந்து கொள்ள முடியாது.

நமது நாட்டில் அரசியல் சாசனம் செயல்பாட்டுக்கு வந்து 73 ஆண்டு கள் ஆகிவிட்டது. இந்த காலகட்டத்தில் நாம் சிலவற்றை அடைந்துள்ளோம். சுதந்திரப் போராட்டத்தின் போது நாட்டு மக்களிடையே பல்வேறு கேள்விகள் எழுந்தன. நாடு விடுதலை அடைந்த பின்னர் மகாத்மா காந்தியை சக்கர வர்த்தியாக ஆக்க வேண்டுமா? நேருவை ராஜாவாக ஆக்க வேண்டுமா? என்பன போன்ற கேள்விகள் நாட்டு மக்கள் முன்பு விவாதிக்கப்பட்டன. அதற்கு மக்கள் "எங்களுக்கு மகாராஜாக்கள் வேண்டாம், சக்கரவர்த்திகள் வேண் டாம், நிலவுடமை ஒழிக்கப்பட வேண்டும், அரசியல் அதிகாரம் மக்கள் கைகளுக்கு மாற்றப்பட வேண்டும்" என்று பதில் அளித்தனர். அதுதான் மக்கள் ஜனநாயகம். மற்றொரு கேள்வி இந்தியாவில் உள்ள மக்களில் 80 விழுக்காட்டினர் இந்துக்கள். மற்ற 20 விழுக்காட்டினர் இஸ்லாமியர்கள், பௌத்தர்கள் சமணர்கள். சீக்கியர்கள், பார்சிக்கள் என இருந்தனர். இந்து மதத்தை சேர்ந்த சிலர் இந்தியா விடுதலை அடைந்த பின்னர் இந்து அரசு ஏற் படுத்தப்பட வேண்டும் என்று கூறி னார்கள். இதற்கும் மக்கள் பதில் அளி த்தனர். நாம் பல்வேறு நாடுகளில் இருந்து வந்துள்ளோம். பல்வேறு இனங்களில் இருந்து வந்துள்ளோம். பல்வேறு மொழிகளை பேசுகி றோம். ஆனால் அனைவரும் ஒன்றாக இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம். இந்த நாட்டின் நாடி நரம்புகளில் இணைந்துள்ளோம். எனவே, இந்து ராஷ்டிரம் இந்தி யாவுக்கு தேவையில்லை என்று சொன்னார்கள். எங்களுக்கு முஸ்லீம் அரசோ அல்லது சீக்கிய அரசோ அல்லது பௌத்த அரசோ தேவை யில்லை. மதச்சார்பற்ற அரசுதான் தேவை என்று சொன்னார்கள்.

3வது கேள்வி இந்தியாவை எப்படி கட்டியெழுப்ப வேண்டும். தகுதி யின் அடிப்படையிலா, அதிகார பலத்தின் அடிப்படையிலா, அல்லது பண பலத்தாலா என்று மக்கள் விவா தித்தனர். இந்தியா பல நூற்றாண்டு களாக சாதிய அடிப்படையில் சமத்துவமின்மை நீடிக்கும் ஒரு நாடு. பல சாதிகளுக்கு அடிப்படை உரிமை கள் மறுக்கப்பட்டுள்ள நாடு. சில ருக்கு கல்வி உரிமை மறுக்கப்ப ட்டுள்ள நாடு. சிலருக்கு நிர்வா கத்தில் பங்கேற்கும் உரிமை மறுக் கப்பட்டுள்ள நாடு.



**புரிந்துகொண்டால் சரி!**

நாங்கள் விழவில்லை
பள்ளத்துக்குள் இருக்கிறோம்!

நாங்கள் பட்டினியாக இல்லை
சாப்பிடாமல் இருக்கிறோம்!
விலை ஏறவில்லை
நாங்கள் அதிகமாக
கொடுத்து வாங்குகிறோம்!
ரூபாய் இறங்கவில்லை
டாலர்தான் ஏறி
ஒய்யாரம் காட்டுகிறது!

இவ்வளவையும்
புரிந்து கொண்டால்
நீங்கள் இந்தியப்
பொருளாதாரத்தின் புலி!

-சு. வெங்கடேசன், எம்.பி.

நீதி வழங்கும் துறையில் பங்கேற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ள நாடு. ஒரு சிலரை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். இப்படி சுதந்தி ரத்திற்கு முன்பு பெரும்பாலான மக்க ளுக்கு பல்வேறு வகைகளில் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. எனவே, எங்களுக்கு தகுதியின் அடிப்படை யிலான ஆட்சி முறையோ? அதிகார பலம் பொருந்திய ஆட்சி முறையோ? அல்லது பணபலம் பொருந்திய ஆட்சி முறையோ? தேவையில்லை. சமூக நீதியுடன் கூடிய ஆட்சிதான் வேண்டும் என்று மக்கள் சொன்னா ர்கள். தில்லியில் இருந்து கொண்டு இந்தியா முழுவதும் ஆட்சி செலுத்த முடியுமா? என்பது நான்காவது கேள்வி. இதற்கு பதில் ஆட்சி செலுத்த முடியாது. நாட்டின் ஒவ்வொரு பகுதி யிலும் ஒவ்வொரு மொழி பேசப்படு கிறது. அந்தந்த மொழிக்கென்று ஒரு கலாச்சாரம் உள்ளது. பல்வேறு பழக்க வழக்கங்கள் உள்ளன. ஒவ்வொரு மொழி பேசும் மக்க ளுக்கான முன்னுரிமைகள் வேறு, கோரிக்கைகள் வேறு, சவால்களும் வேறுவேறு. எனவேதான் இந்த சூழ லில் தில்லியில் இருந்து இந்தியா முழுவதும் ஆட்சி செய்ய முடியாது என மக்கள் சொன்னார்கள். எனவே, தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் பகு தியை இந்தியா என்றோ தெலுங்கு மொழி பேசும் பகுதியை இந்தியா என்றோ சொல்ல முடியுமா? என்றால் முடியாது. அப்படி ஒரு நிலை வந்தால் இந்தியா என்ற நாடே இருக்காது. எனவேதான் அன்று நமது முன்னோர்கள் எங்களுக்கு மத்தி யிலும் மாநிலத்திலும் ஆட்சி தேவை என்று சொன்னார்கள். இப்படித்தான் கூட்டாட்சி முறை நமது நாட்டில் உரு வானது. இதனால்தான் நமது அர சியல் சாசனத்தில் கூட்டாட்சி, மதச்சார்பின்மை, ஜனநாயகம், சோசலிசம், சமூக நீதி உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன. இதுதான் கடந்த 73 ஆண்டுகளில் அமலாகி யுள்ளது.

அரசியல் சாசனத்தால் என்ன பயன்? அது சாதித்தது என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளாதவரை அரசியல் சாசனத்தைபாதுகாக்கவேண்டிய அவசியத்தை அறிந்துகொள்ள முடியாது. சுதந்திரத்திற்கு முன்பு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒரு ஆட்சியின் கீழ் இருக்கவில்லை. அதை ஒரு ஆட்சியின் கீழ் இந்த அரசியல்சாசனம்தான் கொண்டு வந்தது. தேசிய கொடி, தேசிய சின்னம், தேசிய கீதம் எல்லாம் வந்தது. நாடாளுமன்றம் உரு வாக்கப்பட்டது. நாட்டு மக்கள் அனை வருக்கும் தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டன. நிலவுடைமையை ஒழித்தோம். அங்கு ஜனநாயக முறை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. நிர்வாகத்துறையில் மாநில அரசுகள், மாவட்ட நிர்வாகங்கள், தாலுகா நிர்வாகங்கள், பஞ்சாயத்துக்கள் உருவாக்கப்பட்டன. நீதித்துறை யில் உச்சநீதிமன்றம், உயர்நீதி மன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன. இந்த ஜனநாயக அமைப்புகள் அனைத்தும் அரசி யல் சாசனத்தால்தான் உருவாக் கப்பட்டன. நாடு சுதந்திரம் அடைந்தபோது நாட்டின் எழுத்தறிவு 18 விழுக்காடு தான். ஆனால் இன்றோ 80 விழுக்காடு. 70 விழுக்காட்டிற்கும் அதி கமான மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருந்தனர். ஆனால் இன்று அது 20விழுக்காடாக குறைக்கப் பட்டுள்ளது. வேளாண் உற்பத்தி யும் பல மடங்கு அதிகரித்து வெளி நாடுகளுக்கு உணவுத்தானி யங்களை ஏற்றுமதி செய்கிறோம். அரசியல் சாசனத்தால் தான் இத்த கைய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. சாலைகள், மருத்துவமனைகள், மின்சாரம் உள்ளிட்டவை கிடைத் துள்ளது. இருப்பினும் மக்க ளின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப் படவேண்டும். சுதந்திரத்திற்கு முன்பு தலித்துகள், பெண்கள், சிறுபான்மை மக்கள் இரண்டாம் குடிமகன்களாக நடத்தப்பட்டனர். ஆனால் சுதந்தி ரத்திற்கு பின்னர் பழங்குடியினர் ஒருவர் குடியரசுத்தலைவராக அமர முடிகிறது. ஒரு இஸ்லாமியர்குடியரசு துணைத்தலைவராக ஆக முடிகிறது. இது அனைத்தும் அரசியல் சாசனத்தால் விளைந்தவை. அனைத்து மதத்திற்கும் புனித நூல் இருந்தா லும் அவை அனைத்தையும் பாது காக்கும் புனிதநூல் அரசியல் சாசனம் என்பதை மறந்து விடக்கூடாது.

ஆனால் இந்த அரசியல் சாசனத்தை சீர்குலைக்கும் வேலைகள் தற்போது வேகமாக நடைபெற்று வருவது கவலையளிக்கிறது. அரசி யல் சாசனத்தை பாதுகாக்க வேண்டிய நீதிபதிகள் அடுத்த பத வியை எதிர்பார்த்து வேடிக்கை பார்க்கின்றனர். இன்று நாடு முழு வதும் மத அடிப்படை வாதம் தலைதூக்கியுள்ளது. தீவிர வாதம், அடிப்படைவாதம், ஊழல், அரசியலில் கிரிமினல் என பல்வேறு சவால்கள் எழுந்துள்ளன. இதற்கு நாம் கடிவாளம் இடாவிட்டால் அரசியல் சாசனத்தை யும் நாட்டையும் பாதுகாக்க முடியாது. இந்த சவால்களை நாம் அனுமதித்தால் அவை ஜனநாய கத்திற்கு முடிவு கட்டிவிடும். முடி யாட்சி முறை மீண்டும் வந்துவிடும். எனவே அரசியல் சாசனத்தை பாதுகாக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை நாட்டில் தற்போ துள்ள நிலைமைகள் உணர்த்து கின்றன. ●

கட்டுரை

# நம் பொறுமைக்கும் எல்லையுண்டு!

**– தெ.வாசுகி**

"தத்துவவியலை காட்டிலும் வரலாறு மக்களுக்கு உண்மையை அறியவைக்கிறது" ஆக்டன்

இந்தியாவில் ஏற்பட்ட காலனி ஆதிக்கத்தின் விளைவானது ஆங்கிலேயர்கள் இந்தியாவில் கொள்ளையடித்த பணத்தையே மீண்டும் தொழிற்சாலைகளில் முதலீடு செய்தனர். இந்தியாவின் செல்வங்களை சுரண்டுவதிலேயே குறிக்கோளாக இருந்ததால் வேலையின்மை பொருளாதார சீர்குலைவால் இந்தியர் மக்கள் போர் வீரர்களாக மாறினர். 1857 ல் ஏற்பட்ட விடுதலைப் போராட்டத்தின் விளைவாக கிழக்கிந்திய கம்பெனி திரும்ப பெறப்பட்டு பிரிட்டீஷ் முடியாட்சியின் கீழ் நேரடியாக வந்தது. மக்களின் நம்பிக்கையை பெற புதிய தொழில் துறைகள் திட்டங்கள் கொண்டுவரப்பட்டது, இயந்திரங்களில் நவீனம் இல்லாததால் பழைய மற்றும் பழுதடைந்த இயந்திரங்களில் குறைந்த கூலிக்காக பலமணிநேரம் பணிபுரியும் நிலை ஏற்பட்டது. உற்பத்தி அதிகரித்தாலும் உழைப்பவனின் நிலைமாறவில்லை. ஆங்கிலேயர்களின் அடக்குமுஅடக்குமுறையை எதிர்த்து தொழிலாளர்கள் போராடினார்கள். தொழிற்சங்கங்களில் நடைபெறும் போராட்டங்களை ஒடுக்குவதற்காகவும், கம்யூனிசம் மற்றும் சோசலிசத்தை முற்றிலும் இந்தியாவில் ஒழிப்பதற்காகவும் 1928-29 களில் தொழில் தகராறு சட்டவரைவு மசோதாவை கொண்டு வந்தது. இச்சட்டவரைவிற்கு எதிர்ப்பு தெரிவித்த மாவீரன் பகத்சிங் 1929 ஏப்ரல் 8 அன்று தொழிற்தகராறு சட்ட மசோதா நிறைவேறும் நாளன்று சென்ட்ரல் அசெம்ளி உறாலில் வெடிகுண்டு வீசினார். அதன்பின் அவர் சிறைபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்ட தியாக வரலாறு நாம் அனைவரும் அறிந்ததே.

தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும், போராடும் உரிமையும் பலவீரத்தியாகிகளின் இரத்த சிந்தி உயிர்த்தியாகங்கள் செய்து பெற்றோம். இன்றைய முதலாளித்துவ அரசுகளால் தொழிற்சங்க உரிமைகள் நசுக்கப்பட்டு பெருமுதலாளிகளுக்கு ஆதரவாக சுருக்கப்பட்டும், திருத்தப்பட்டும் வருகிறது.

முதல் உலகயுத்தத்தின் முடிவில் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கம் Leage of nations அதன் துணை அமைப்பாக தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் international labour organizations ஆகிய அமைப்புகள் உழைப்பாளி மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு கோட்பாடுகளை வகுத்தது. அவற்றின் அடிப்படையில் ஒருதொழிலாளி பணிஓய்வு பெறுகின்றபோது அவன் தன்னுடைய எஞ்சிய வாழ்நாளை வழிநடத்தி செல்வதற்கான சேமிப்புத்தொகைகயை அத்தொழிலாளி பெறுவதற்காக வைப்புநிதித்திட்டத்தை செயல்படுத்தியே ஆகவேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது. இத்திட்டத்தில் உழைப்பாளி மட்டும் சந்தாவை செலுத்துவதோடு நின்றுவிடாமல் அவரது உழைப்பால் ஆதாயம் அடைந்த நிர்வாகம் அவரது வருங்கால சேமிப்புக்கான பங்களிப்பை செலுத்தவேண்டும் என்று வகுக்கப்பட்டது. ஓய்வூதியம் என்ற கோட்பாடு சட்டபூர்மாக அறிமுகப்படுத்தப்பட்டது சோவியத்யூனியன் என்ற சோசலிச நாட்டில்தான் தோழர் லெனின் தலைமையிலான அரசாங்கம் உழைப்புக்கேற்ற ஊதியம், ஓய்வூதியம் பணிக்கொடை குடும்ப நலன் பாதுகாப்பு உள்ளிட்ட உரிமைகளை சட்டமாக்கியது. நமக்கு இன்றைக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் என்பது ஆங்கிலேயர் காலத்தில் வருவாய்துறை, காவல்துறை பொதுப்பணித்துறையினருக்கு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் நாம் சுதந்திர போராட்ட தியாகங்களின் மூலம் அமைக்கப்பட்ட ஜனநாயக குடியரசில் நமக்கான உரிமைகள் அனைத்தும் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

குஜராத் மாடல் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிரதமர் மோடியை போல் திராவிட மாடல் என்று சொல்லி ஆட்சி செய்துக்கொண்டிருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது தேர்தல் கால வாக்குறுதிகளை குழிதோண்டி புதைத்துவிட்டு அரசு ஊழியர்களுக்கும் மக்களுக்கும் அநீதி இழைக்கக்கூடிய வகையில் அரசுத்துறைகளில் காலியாகவுள்ள அனைத்து அரசுப்பணியிடங்களையும், ஒப்பந்தமுறையில்

வெளிமுகமை மூலம் நிரப்பிட அரசாணை எண் 115 ஐ வெளியிட்டு தனக்கு வாக்களித்து அரியணையில் அமர வைத்த குடிமக்களுக்கு சமூக அநீதியை இழைத்துள்ளார். படித்துவிட்டு பெரும் கனவுகளோடு அரசு வேலைக்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்துவிட்டு லட்சக்கணக்கான இளைஞர்கள் காத்திருக்கின்றனர். மேலும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் காத்திருப்போர் எண்ணங்களில் பேரிடியாக தாக்கியுள்ளது.

கடந்த காலங்களில் அரசு ஊழியர்களின் போராட்டங்களை ஆதிமுக அரசு அலட்சியப்படுத்தியது. திமுக அரசு தான் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்றுவேன் என்று கூறிவிட்டு நிதிச்சுமையை காரணம் காட்டி நமது உரிமைகளை ஒவ்வொன்றாக பறித்து நமது உணர்வுகளை உதாசீனப்படுத்தி வருகிறது. நமது முன்னோடித் தோழர்கள் இரத்தம் சிந்தி உயிர்தியாகம் செய்து பெற்ற உரிமைகளை நாம் பேணிகாக்கவேண்டிய கடமையும் அதனை ஆளும் அரசுகள் தட்டிப்பறித்தால் நமது ஒன்றுபட்ட போராட்டங்களின் மூலம் வென்றெடுக்க வேண்டியது நமது கடமையாகிறது.

வரலாறு என்பது எல்லா காலகட்டங்களிலும் எல்லா நேரங்களிலும் திரும்ப திரும்ப வந்துக் கொண்டிருக்கும். ஆங்கிலத்தில் History repeat it self என்று கூறுவார்கள். தற்போதய அரசு ஊழியர்களின் நிலை யென்பது 2003 ஐ விட மோசமான நிலையாக தள்ளப்படுகிறது. நான் ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டத்தை இரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்குவேன் என்று கூறி ஆட்சிக்கு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைச்சரவையில் தான் மனிதவள மேலாண்மைதுறை அமைச்சர் பழைய ஓய்வூதியம் சாத்தியமில்லை என்று கூறுகிறார். நான் ஆட்சிக்கு வந்ததும் சத்துணவு அங்கன்வாடி, ஊர்புற நூலகர், ஊராட்சி செயலர், எம்.ஆர்.பி.செவிலியர் உள்ளிட்ட சிறப்புக் காலமுறை ஊதியம் தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவேன் என்று கூறிவிட்டு, சத்துணவு ஊழியர்களிடம் வழங்கவேண்டிய முதல்வரின் காலை உணவு திட்டத்தை தனியார் மூலம் செயல் படுத்த அரசாணை வெளியிட்டு குழந்தைகளுக்கு வயிறார உணவளித்த சத்துணவு ஊழியர்களின் உணவில் மண்ணள்ளி போட்டிருக்கிறது தி.மு.க அரசு.

சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலதமாக அறிவிக்க கோரி அடிவயிற்றில் அடைக்காத்த நெருப்பாக 20 ஆண்டுகளாக போராடிக்கொண்டிருக்கும் சாலைப்பணியாளர்களது கோரிக்கையை திராவிட மாடல் அரசு நிறைவேற்றும் என்று காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றத்தை மட்டுமே வழங்கி அவர்களின் அடிவயிற்றின் தீயை அணையாமல் பார்த்துக்கொள்கிறார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல ஏற்கனவே இருந்த அ.திமு.க அரசு தள்ளிப்போட்டிருந்த சரண்விடுப்பை காலவரையின்றி நிறுத்தி வைத்தது மட்டுமல்லாமல் மத்திய அரசு வழங்கி வரும் அகவிலைப்படியை கூட மாநில அரசு வழங்கமறுத்து வருவது என்பது 2003ல் அ. தி.மு.க அரசு அரசு ஊழியர்களின் மீது தொடுத்த வன்முறையை இப்போதய ஆளும் திமு.க அரசு நம்மீது தொடுத்துக்கோண்டிருக்கிறது.

வரலாற்று சிறப்பு மிக்க நமது வீரஞ்செறிந்த போராட்டங்களினாலும் உயிர்த்தியாகங்களினாலும் பெற்றுத்தந்த நமது உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. நாம் போராடிப்பெற்ற அரசுப்பணியிடங்கள் கொத்தடிமை கூலிமுறையில் மனிதவளத்தை சுரண்டும் அவுட்சோர்சிங் ஏஜென்சியிடம் அடகு வைக்கப்படுகிறது. சமூக நீதி, திராவிட மாடல் என்று சொல்லி கார்ப்பரேட்டின் கைத்தடியாக செயல்பட்டுக்கொண்டு அரசு ஊழியர்களுக்கும் குடிமக்களுக்கும் சமூக அநீதியும், துரோத்தனமும் நிறைந்த இந்த அரசிடமிருந்து நமது உரிமைகளை பெறவும் சமூக நீதியை நிலைநாட்டவும் டிசம்பர் 17 அன்றுசேலத்தில் நடைபெறும் நமது மாநில பிரதிநிதித்துவ பேரவையில் பெரும்போர் பிரகடனத்திற்கு முன்னோட்டமாக நடைபெறும் இராணுவ அணிவகுப்புக்கு நிகரான நமது மிடுக்கான சீருடை அணிவகுப்பில் இந்த ஆட்சியாளர்கள் மிரள வேண்டும், தொழிற்சங்கங்களின் புருவம் உயரவேண்டும், நமது மாநில பிரதிநிதித்துவ பேரவையின் அறைகூவல் தீர்மானம் வென்றெடுத்திட வீரம்செறிந்த போராட்டத்திற்கு தயாராவோம். மீண்டும் வரலாறு படைப்போம். ஆம் தோழர்களே!. வரலாறு என்பது எல்லா காலகட்டங்களிலும் எல்லா நேரங்களிலும் திரும்ப திரும்ப வந்துக் கொண்டிருக்கும் (History repeat it self) ●

கட்டுரை

# ஒரு இயந்திரம் போல் மனிதன் இருக்க முடியுமா?

**- ச.லெனின்**

ஒரு இயந்திரம் நெடுநேரம் இயங்கும்போது அதைச் சற்று நேரம் நிறுத்தி வைத்துவிட்டு மீண்டும் இயக்குவது அந்த இயந்திரத்திற்கான ஓய்வு. அதை அதற்கான தூங்கும் நேரம் என்றே குறிப்பிடலாம். ஆனால், மனிதன் இயந்திரம் அல்லவே. ஓய்வு நேரத்தில் தூங்கி எழுந்த வுடன் உடல் சோர்வு நீங்கலாம், அதேநேரம் மனத்தின் சோர்விற்கு ஓய்வு இல்லையே. வேலைக்குச் செல்வது, தூங்குவது, மீண்டும் வேலைக்குச் செல்வது என ஒரு இயந்திரம் போல் மனிதன் இருக்க முடியுமா? தூங்கும் நேரம்போகப் பொழுதுபோக்கும் நேரம் என்று ஒன்று இருந்தால்தான் மனிதர்கள் தங்கள் குடும்பத்துடன் நேரம் செல வழிக்க முடியும். தனக்கு விருப்பமான வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். படிப்பது, எழுதுவது, விளையாடுவது, ஓவியம் தீட்டுவது என்பன போன்ற மனத்தைப் புத்துணர்ச்சி கொள்வதற்கான நேரம் தேவை என்பதையே 8 மணி நேர பொழுதுபோக்கு என்பது உள்ளடக்குகிறது. உற்பத்தி கருவிகளின் வளர்ச்சி ஏற்படும் போது உற்பத்தி உயரும். உற்பத்தி உயரும்போதும் முதலாளித்துவம் மனிதனின் உழைப்பு நேரத்தைக் குறைப்பதில்லை. மாறாக, வேலை நேரத்தை உயர்த்துகிறது. உண்மையில் முதலாளித்துவ சமூகம் தொழிலாளியை இந்திரத்தின் ஒரு பகுதியாகவே மாற்றுகிறது. இதையே, முதலாளித்துவ சமூகத்தில், தொழிலாளி "எத்திரத்தில் பொருத்தப்பட்ட ஒரு துணையுறுப்பாய் ஆகிவிடுகிறார்" என்று "கம்யூனிஸ்ட் அறிக்கை" யில் மார்க்சும் ஏங்கெல்சும் குறிப்பிடுகின்றனர்.

அவசிய உற்பத்தி நேரத்தைத் தாண்டி எவ்வளவு நேரம் ஒரு வேலை நாளை நீட்டிக் கொண்டு போகலாம்? என்றே மூலதனம் சிந்திக்கும். "உழைப்புச் சக்திக்கு (தொழிலாளிக்கு) சில மணி நேரம் ஓய்வு கொடுக்காமல் அவர் தன்னை புதுப்பித்துக் கொள்ள முடியாது. எனவே, ஓய்வுக்கான அந்தச் சில மணிநேரம் தவிர்த்து, இருபத்தி நான்கு மணி நேரத்தில் மீதமுள்ள நேரமெல்லாவற்றையும் ஒரு வேலைநாள் என்றே மூலதனம் கருதுகிறது" என்று விளக்கியுள்ளார் மார்க்ஸ். உபரி மதிப்பை உருவாக்கி லாபத்தைக் குவிக்க வேண்டும் என்பதை மட்டுமே பிரதானமாகக்கொண்ட முதலாளித்துவம், வேலைநாளின் அளவை நீட்டிக்கும் போது, அது அனைத்துவிதமான தார்மீக வரம்பையும் மீறுவதோடு, தொழிலாளியின் உடலினுடைய தாங்கும் சக்தியின் அதிகபட்ச வரம்பையும் மீறுகிறது. உழைப்பு சக்தியின் (தொழிலாளியின்) வாழ்வு காலம் இத்தகைய உழைப்புச் சுரண்டலின் காரணமாகக் குறைவது பற்றி மூலதனம் கவலைப்படுவதில்லை. இதன் மூலம் தொழிலாளி விரைவாக நலிவுற்று இறந்து போகும் நிலையை உருவாக்குகிறது. வேலை நேரத்தை நீட்டிப்பதென்பது தொழிலாளியின் ஆயுட் காலத்தைக் குறைக்கும் செயலாகும் என்கிறார் மார்க்ஸ்.

தொழிலாளியின் இறுதி சொட்டு உழைப்பு சக்தி வரை கட்டற்ற முறையில் மூலதனம் சுரண்டிக் கொழுக்கிறது. "இதன் விளைவாகத் தொழிலாளிகள் கூட்டு எதிர்ப்பை கையாளும் நிலைக்கு வருகிறார்கள். வர்க்கத்திற்கும் வர்க்கத்திற்கும் போராட்டம் என்கிற வகையில் ஒன்று சேர்ந்த கூட்டான முதலாளிகளுக்கும், அதேபோல ஒன்று சேர்ந்த கூட்டான

தொழிலாளர்களுக்குமிடையே போராட்டம் துவங்குகிறது.'' ஒரு வேலைநாளின் உழைப்பு நேரத்தை இப்படியான போராட்ட வரலாறே தீர்மானித்தது. அதுவே வேலை நேரத்தை எட்டு மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்கிற கோரிக்கையாக எழுந்து, தொழிலாளர்களின் ரத்தச் சுவட்டில்தான் மே தினம் உருவெடுத்தது. அதன் தொடர்ச்சியாகவே வேலைநேரத்தை 6 மணி நேரமாக குறைக்க வேண்டும் என்கிற கோரிக்கையும் எழுந்துள்ளது. தீர்மானிக்கப்பட்ட இந்த வேலை நேரத்திலும், தொழிலாளி தனது சொந்த வாழ்க்கைக்கு அவசியமாக மேற்கொள்ள வேண்டிய உழைப்புடன், உற்பத்தி சாதனங்களின் உடைமையாளனாக இருக்கும் முதலாளியின் லாபத்திற்காகவும் சேர்த்தே கூடுதலாக உழைக்க வேண்டியுள்ளது. ''தங்களையும், தங்கள் குழந்தைகளையும் அடிமைத்தனத்திற்கும், சாவிற்கும் விற்று விடாமல் தடுப்பதற்கான ஒரு பொதுச்சட்டமாக'' இது அமைவதால்தான் இந்த ஒப்பந்தமும் அவசியமாகிறது. இந்த வேலைநேரமும்கூட போராட்டத்தின் விளைபொருளே ஆகும் என்கிறார் மார்க்ஸ்.

கூலி உயர்வுக்கான போராட்டங்கள் மற்றும் வேலை நேரத்தைக் குறைப்பதற்கான போராட்டங்கள் மூலம்தான் முதலாளித்துவத்திற்கு எதிராகத் தொழிலாளர்களை அணிதிரட்ட முடியும். அதேநேரம், தொழிலாளர்களின் போராட்டம் தங்களின் உழைப்பின் மதிப்பைத் தக்க வைத்து கொண்டு தங்களின் உழைப்பை விலைக்காக விற்கும் நிலையைத் தொடர்வதாகவே இருந்துவிட முடியாது. நியாயமான கூலிக்கான போராட்டம் என்பது ஒட்டுமொத்த கூலி அமைப்பு முறையை ஒழிப்பதற்கான இலக்கை உள்ளடக்கியது. கூலி உயர்வு என்பதற்கான போராட்டம் என்பதோடு நின்றுவிடாமல் சுரண்டலின் வடிவமாக உள்ள முதலாளித்துவத்தின் 'கூலி அமைப்புமுறை ஒழிக' எனும் புரட்சிகர முழக்கத்தைத் தொழிலாளி வர்க்கத்தினர் தங்கள் பதாகையில் பொறித்துக் கொள்ள வேண்டும் என்றார் மார்க்ஸ். ●




நீங்க ஒரு வாசகம் சொன்னாலும் அது திருவாசகம் தான்!

கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை தமிழர்களை மட்டுமல்ல அரசு ஊழியர்களையும் விழித்துக் கொள்ளச் சொல்வதுபோல் இருந்தது.

**- மது ஜெயபால், அந்தியூர்**

பொறுமைகளின் எல்லை தகர்த்து நிகரில்லா நம் உரிமைகளை மீளப்பெற வலியுறுத்தியுள்ள தலைவர் மடல் நவம்பர் மாத இதழுக்கு மணிமகுடம்.

**- கஸ்தூரி ராஜா, கீழ்ப்பாக்கம்.**

முதல்வர்வருக்கு திறந்த மடல் எழுதியுள்ள பொதுச்செயலாளரின் வரிகள் ஒவ்வொன்றும் ஒரு முத்து.

**- மாணிக்கம், மணமேல்குடி.**

பெருமுதலாளிகள், கார்ப்பரேட்டுகள் மீது காட்டிவரும் கரிசனத்தை மோடி அரசாங்கம் ஏழைகள் மீதும் பொதுமக்கள் மீதும் காட்டுவதில்லை என்ற ''பசி பட்டினி இந்திய மக்கள்'' கட்டுரையின் வரிகள் முற்றிலும் நிதர்சனமானவை.

**- கோபாலகிருஷ்ணன், ஆலங்குடி.**

ஏன் நாம் போராட்ட வாளேந்த வேண்டும் என்பதற்கு அருமையான விளக்கமாக இருந்தது மு.அ,.வின் கட்டுரை.

**- அனிதா சாமுவேல், சைதாப்பேட்டை ஜோ நகர்.**

பிடல் காஸ்ட்ரோ பற்றிய பெரணமல்லூர் சேகரனின் கட்டுரை அற்புதமாக இருந்தது,

**- பா. சீனிவாசன், கிருஷ்ணகிரி.**

ரிஷி சுனக் பற்றி தெரியாத தகவல்களை தந்து உதவியது அவரைப்பற்றிய கட்டுரை.

**- ஆனந்தவல்லி, அம்பத்தூர்.**

நவம்பர் மாத அரசு ஊழியர் இதழின் கட்டுரைகள் கவிதைகள் அனைத்தும் படிக்கும்படியும் ரசிக்கும்படியும் இருந்தன ஆசிரியர் குழுவிற்கு வாழ்த்துக்கள்.

**- வெங்கடாசலம், வேலூர் கஸ்ப்பா.**

தலைமைச் செயலக சங்கத்தின் புதிய தலைவர் தோழர் வெங்கடேசன் அவர்களுடனான சந்திப்பின் மூலம் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

**- பீட்டர் செல்வராஜ், நாகர்கோவில்.**

கட்டுரை

# ஆளுநரின் அதிகாரம்


**– சிகரம். ச.செந்தில்நாதன்**

ஒய்வுபெற்ற நீதிபதிகளில் மிகச்சிலரே மக்கள் மன்றத்தில் சிம்மாசனம் போட்டு அமர்ந்து இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் முனைவர் பட்டம் பெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன். அனைத்துச் சாதியி னரும் அர்ச்சகர் ஆகுதல், நீட் தேர்வு போன்ற பிரச்சினைகளைப் பேசும் போது மறக்க முடியாத நீதியரசராக ஏ.கே.ராஜன் மக்கள் மன்றத்தில் வீற்றிருக்கிறார். அவர் அண்மை யில் அரசமைப்பு சட்டம் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதி இருக்கிறார். அந்த நூலின் பெயர் "*THE CONSTITUTION OF INDIA - IS NOT WHAT IT IS*" தமிழில் 'இந்திய அரச மைப்பு: சட்டம் மட்டும் அல்ல' என்று சொல்ல லாம். அப்படிச் சொன்னாலும் புரிந்து கொள்ள விளக்கம் தேவைப்படும். அரச மைப்புச்சட்டம் தொடர்பான சில உச்சநீதி மன்ற தீர்ப்புகளைப் படிக்கும் போது அந்தத் தீர்ப்புகள் அரசமைப்புச்சட்டத்தின் ஆன்மா வை அல்லது உணர்வுகளைச் சரியான பிரதி பலிக்கவில்லையே! என்று தோன்றும். அதனால் தான் அந்தத் தலைப்பை நூலுக்கு வைத்து இருக்கிறார். அதாவது நீதிபதிகளின் சட்டத்திற்குக்கான விளக்கங்களே சட்டம் ஆகிவிடுகின்றன என்பதை இந்த நூலில் எடுத்துக் காட்டுகிறார். இந்த நூலில் 23 கட்டுரைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் முக்கியமானவை. என்றாலும் சில மாநிலங்களில் ஆளுநர்க ளின் சொல்லும் செயலும் கடும் விமர்ச னத்திற்கு உள்ளாகி விடுகின்றன. எனவே, ஆளுநரின் அதிகாரம் பற்றி அவர் கூறுவதை நாம் காதுகொடுத்து கேட்கக் வேண்டும்.

இப்போது தமிழ்நாட்டில் இருக்கும் ஆளுநர் சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டமுன்வடிவங்களை அப்படியே கிணற்றில் போடுவதால், பல சர்ச்சைகள் எழுகின்றன. ஒப்புதல் தர வேண்டிய சட்ட முன்வடிவங்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தருவது இல்லை. காலம் கடத்துகிறார். குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டிய சட்டமுன்வடிவங்களை அனுப்பாமல் தானே வைத்துக் கொள்கிறார். இது குறித்து நீதியரசர் ஏ.கே.ராஜன் கூறுபவைகள் முக்கியமானவை. அரச மைப்புச்சட்ட கூறு 200 இவ்வாறு அமைந்து இருக்கிறது. அதாவது ஆளுநர் சட்டமுன் வடிவத்திற்கு ஒப்புதல் அளிப்பதாக இருந்தால், அவ்வாறே ஒப்புதல் அளித்து விட்டதாக அறிவிக்க வேண்டும்; அல்லது ஒப்புதலை நிறுத்தி வைத்து இருந்தால் அதையும் தெரி விக்க வேண்டும்; அல்லது குடியரசு தலைவருக்கு அவர் பரிசீலனை செய்வதற்கு அனுப்பி வைத்து இருந்தால் அதையும் சொல்ல வேண்டும்.

ஆளுநர் எப்போது சட்டமன்றம் இயற்றிய சட்டம் முன்வடிவை, ஒப்புதல் தராமல், குடிய ரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும் என்பதை இதே கூறு 200 இல் சொல்லப் பட்டுள்ளது. அதாவது ஒரு சட்ட முன் வடிவம், முறையான சட்டம் ஆனால்; அது உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களில் குறுக்கிடும் என்று ஆளுநர் கருதினால், அந்தச் சட்ட முன்வடிவத்திற்கு ஒப்புதல் தராமல், குடியர சுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பலாம். அதாவது ஆளுநருக்கு எல்லாச் சட்டமுன் வடிவங்களையும் ஒப்புதல் அளிக்காமல் வைத்துக் கொள்ள முடியாது. உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்களில் குறுக்கிடும் வகையில் உள்ள சட்டமுன் வடிவங்களை

மட்டுமே, குடியரசுத் தலைவருக்கு அவரின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும். மற்றச் சூழ்நிலைகளில் சட்ட முன் வடிவத்திற்கு ஒப்புதல் தராமல் தன்னிடம் வைத்துக் கொள்ள அரசமைப்புச் சட்டப்படி அதிகாரம் இல்லை. ஒரு சட்ட முன் வடிவத்தை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தால், குடியரசுத் தலைவர் என்ன செய்ய வேண்டும் என்பதை 201 வது கூறு விளக்குகிறது சட்ட முன்வடிவத்தை சட்டமன்றத்திற்கு திருப்பி அனுப்பச்சொல்லி குடியரசுத் தலைவர் ஆளுநரைக் கேட்கலாம். சட்ட முன்வடிவம் மீண்டும் சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்பப் பட்டால், சட்டமன்றம் 6 மாதங்களுக்குள் மறுபரிசீலனை செய்து, திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்கள் இல்லாமலோ சட்ட முன் வடிவத்தை நிறைவேற்றி குடியரசு தலைவருக்குச் சமர்ப்பிக்கலாம். அப்போது குடியரசு தலைவர் நிராகரிக்க முடியாது. எனவே குடியரசுத் தலைவரின் அதிகாரமும் வரை யறுக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.



"15 லட்சம் போடலேன்ன பரவாயில்ல,,, பொங்கல் செலவுக்கு 15 ஆயிரமாவது கொடுங்க ஜி."

அது மட்டுமல்ல, கூறு 79 இன்படி குடியர சுத்தலைவரும் நாடாளுமன்றத்தின் ஓர் அங்கம் தான். கூறு 168 இன் படி மாநில ஆளுநரும் சட்ட மன்றத்தின் ஒரு அங்கம் தான். அப்படி இருக்கும்போது, அதாவது ஆளுநரே சட்டமன்றத்தின் ஓர் அங்கமாக இருக்கும்போது, அவர் எப்படி சட்டம் முன்வடி வத்தை நிராகரிக்க முடியும் என்ற கேள்வியை நீதியரசர் ஏ.கே. ராஜன் எழுப்புகிறார்? அது மட்டும் அல்ல; இங்கிலாந்தில் மன்னராட்சி இன்னும் இருக்கிறது.இங்கி லாந்து நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தை ஒப்புதல் தராமல் மறுக்கும் அதிகாரம் மன்ன ருக்கு உண்டு. என்றாலும் இதுவரை மன்னர்கள் யாரும் ஒப்புதலை மறுத்ததில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். அது மட்டும் அல்ல, எந்தச் சட்டமுன்வடிவத்தையும் பரிசீலனை செய்யும் அதிகாரம் அரச மைப்புச்சட்டத்தில் ஆளுநருக்கு வழங்கப்பட வில்லை என்பதையும் உறுதிபட தெரி விக்கிறார் அவர். ஆளுநர் என்பவர் அமைச்ச ரவையின் ஆலோசனைப்படி நடக்க வேண்டும் என்று அரசமைப்புச்சட்டம் கூறு 163 வலியுறுத்துகிறது. எனவே ஆளுநரின் விருப்பம் என்ற கேள்விக்கே இடம் கிடையாது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். அரசமைப்பு சட்டப்படியும், அங்கீகரிக்கப் பட்ட மரபுகள் படியும் ஓர் ஆளுநர், மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டமுன்வடிவத்தை நிராகரிக்க முடியாது. ஆனால் அண்மைக் காலமாக மத்தியில் ஒரு கட்சியின் ஆட்சியும், மாநிலத்தில் இன்னொரு கட்சியின் ஆட்சியும் ஏற்படும்போது ஆளுநர்கள் முரண்பட்ட நிலையை எடுக்கிறார்கள். ஆளுநர்கள் நிர்வாகத் தலைவர்கள் என்பது அதிகாரமிக்க பதவி அல்ல; வெறும் அலங்காரப் பதவியே என்பதைப் பலரும் மறந்துவிட்டார்கள். அவர்கள் சட்டப்படியும் நடக்கவில்லை. மரபுப் படியும் ஒழுகுவது இல்லை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக் கப்பட்டவர்கள் உச்சநீதிமன்றத்தால் விடு விக்கப்பட்டார்கள். அவர்களை விடுவிக்கக் கோரி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், ஆளுநர் அதை அப்படியே கிடப்பில் போட்டிருந்ததை உச்சநீதிமன்றம் கண்டித்ததையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கொள்கை முடிவுகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிதான் எடுக்க முடியுமே தவிர நிய மிக்கப்பட்ட ஆளுநரால் எடுக்க முடியாது. இது தெரிந்தும் ஆளுநர்கள் தங்களை மேலான வர்களாக நினைத்துக் கொண்டு சட்டத்தை மீறுகிறார்கள். சட்டமுன் வடிவத்திற்கு ஒப்புதல் கொடுக்க "காலக்கெடு" எதுவும் விதிவிக்கப்பட வில்லை என்பது உண்மைதான். அது எதனால் என்றால் சட்ட முன் வடிவத்திற்கு உடனே ஒப்புதல் தந்துவிட வேண்டும் என்பதால்தான் என்கின்றார் நீதியரசர் ஏ.கே. ராஜன். அதே சமயம் அரசமைப்புச்சட்டம் கூறு 111 மற்றும் 200 இல் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் "எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம்" ("AS SOON AS POSSIdLE") என்று ஒரு கூட்டுவாசகமாகச் (PROVISO) சொல்லப் பட்டிருப்பது உடனே ஒப்புதல் தர வேண்டும் என்பதற்கு ஒருவிதிவிலக்கு தான் என்கி றார் நீதியரசர். அமைச்சரவையின் முடிவுப் படி செயல்பட வேண்டிய ஆளுநர், அமைச்சரவையின் முடிவின் மேல் ஆராய்ச்சி செய்யக்கூடாது. எனவே சட்டமுன்வடிவத்திற்கு ஒப்புதல் தரமறுக்கும் ஆளுநரின் நடவ டிக்கை அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. பதவி ஏற்கும் போது அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பேன் என்று கூறி உறுதிமொழி எடுத்துக் கொண்டு விட்டு, அதை ஆளுநர் மீற முடியுமா? உயர்நீதிமன்றமும் உச்சநீதி மன்றமும் அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டிய அரசமைப்புச் சட்ட அங்கங்கள்! இவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது? ஆளுநரே அரசமைப்புச் சட்டத்தை சிதைத்தால் என்ன செய்வது? இந்தக்கேள்விக்கு அரசமைப்புச்சட்டத்தில் பதில் இல்லை. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் இப்படிப்பட்ட நிலைகள் வரும் என்று எதிர் பார்த்து இருக்க மாட்டார்கள். இப்போது அது போன்ற நிலைமைதான் தோன்றிவிட்டது. இதற்கு விடைகாண வேண்டிய பொறுப்பு மக்களிடம் தான் இருக்கிறது. மக்களின் எழுச்சிதான் பிரச்சனையைத் தீர்க்கும் என்று சொல்லும் நீதியரசர் ஏ.கே.ராஜன், வேறொரு வழியும் சுட்டிக்காட்டுகிறார். அதாவது சட்டப் பேரவைத் தலைவர், அரசமைப்புச் சட்டத்தின் இன்னொரு கருவி என்ற முறையில் அரச மைப்புச் சட்டத்தை முடக்கும் ஆளுநரின் செயல்பாடுபற்றிக் குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பலாம்; அதன் அடிப்படையி லும் ஆளுநரைப் பொறுப்பிலிருந்து விலக்கி வைக்க முடியும் என்றும் சொல்கிறார். நூலாசிரியர் நீதியரசர். இத்தோடு நிறுத்திக் கொள்கிறார். சரி, குடியரசுத்தலைவரும் கூட்டாளியானால் என்ன செய்வது? ஜனநாயகப் புரட்சி தான் ஒரே வழி என்று தோன்றுகிறது! ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com